Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 13
இதழ் 8
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மாசி 6 ஜுலை 21 வியாழக்கிழமை (18-2-71)

18 FEB 1971

நவநாகரீக நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
ஹரன் ஜுவல்லர்ஸ்
போன 444
தந்தி: 'இரத்தினம்ஸ்'
50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## விவசாய அமைச்சர் சொல்கிறார்

# வெங்காயம்; மிளகாய் பயிரிட அரசாங்கம் காணி வழங்கும்

## அவசிய மெனில் தனியார் நிலமும் சுவீகரிக்கப்படும்

கோட்டை, புதன்

**மிளகாய், சின்னவெங்காயம் ஆகியவற்றைப் பயிரிட விவசாயிகளுக்கு அரசாங்கம் காணிகளை வழங்கத்தீர்மானித்துள்ளது.**

இப்பயிர்களின் செய்கைக்கு முடிக்குரிய காணிகள் வழங்குவதோடு முடிக்குரிய காணிகள் கிடைக்காத இடங்களில் தனியார் காணிகளையும் அரசாங்கம் சுவீகரித்து வழங்கும்.

இரத்தினபுரி கச்சேரியில் நடைபெற்ற மாவட்ட விவசாய விஸ்தரிப்புக்குழு கூட்டத்தில் உரையாற்றிய காணிவிவசாய அமைச்சர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

விவசாயிகளுக்குக் கஷ்டம் கொடுக்காமல் அவர்களிடமிருந்து நெல்லை உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்வதற்குப் புதிய திட்டமிட்டுள்ளேன் ஒவ்வொருமாவட்டத்திலும் ஒருநெல்கொள்வனவு நிலையத்தை நிறுவி அதன் மூலம் நெல்லைச்சேகரிப்பதாகும். இந்தமாவட்ட கொள்வனவு நிலையங்களுக்கு மற்றும் அப்பகுதியிலுள்ள நெல் கொள்வனவு நிலையங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியனயாவும் விவசாயிகளிடமிருந்துதாம் சேகரித்த நெல்லை அனுப்பி வைக்கும்.

## நன்கொடை

கோட்டை, புதன்

அவுஸ்திரேலியா இலங்கை போக்குவரத்து சபைக்கு 10 லட்சம் ரூபா பெறுமதியான அலுமினியம் ஷீட்டுகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இலங்கையின் ஆஸ்திரேலிய தூதர் திரு. எச். டி. வைட் சிலதினங்களுக்கு முன் இலங்கைக்கு அன்பளிப்பாக ஆவுஸ்திரேலியா வழங்கிய கோதுமைமாவை கையளித்தபோது அலுமினியம் ஷீட்டுகளை நன்கொடையாக வழங்குவது பற்றிக் குறிப்பிட்டார்.

## மகாராஜா சுட்டுக் கொலை

புதுடில்லி, பெப். 17

கிஷெங்கர் மகாராஜா சுபேர்சிங் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையானார்.

இவரை இனந்தெரியாத யாரோ சுட்டுக் கொன்று விட்டார்கள். 45 வயதான மாகாராஜா சுதந்திரா கட்சியின் வேட்பாளராக இந்தத் தேர்தலில் போட்டியிடவிருந்தார்.

கிரிக்கெட் டெஸ்ட்:

## இங்கிலாந்து வெற்றி

சிட்னி, பெப். 17

இங்கிலாந்துக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கட் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றது.

இரு நாடுகளுக்குமிடையிலான 7-வது டெஸ்டில் இங்கிலாந்து 62 ரன்கள் அதிகமாகப் பெற்று வெற்றி பெற்றது.

இன்றைய ஆட்டத்தை 5 விக்கட் நஷ்டத்திற்கு 123 ரன்கள் என்ற நிலையில் ஆரம்பித்த ஆஸ்திரேலியா ஏனைய விக்கட்டுகளை 37 ரன்களுக்குள் இழந்தது.

இரு நாடுகளுக்குமிடையில் நடைபெற்ற ஏழு டெஸ்டுகளில் இங்கிலாந்து இரண்டில் வெற்றி பெற்றது மற்றவைவெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன.

கடைசிடெஸ்ட் ஸ்கோர் விபரம் பின்வருமாறு:-

இங்கிலாந்து முதல் இன்னிங்ஸ்: 184 இரண்டாவது இன்னிங்ஸ்: 302

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸ்: 264 இரண்டாவது இன்னிங்ஸ்: 160.

## தனியார்கைத் தொழிலுக்கு $51\frac{1}{2}$ கோடி ரூபா ஒதுக்கீடு

கோட்டை, புதன்

51 கோடி 40 லட்சம் ரூபாவை அரசாங்கம் தனியார் கைத்தொழில் துறையினருக்கு உதவி செய்யும் பொருட்டு ஒதுக்கியுள்ளது. இப்பணத்தில் 20 கோடி ரூபா குறுகிய காலக் கடனுக்கு கைத்தொழிலாளருக்கு வழங்கப்படும்.

கைதொழில் விவகார அமைச்சு இத்தகவலைவெளியிட்டுள்ளது.

அரசாங்கம்மூலப்பொருள் இறக்குமதிக்கு வேண்டிய வசதிகளைச் செய்துள்ளதால் தனியார் ஸ்தாபனங்களில் தொழில்புரியும் ஊழியர்களை வேலைநீக்கம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது எனவும் மேற்படி அமைச்

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தினர்
இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தாரால்
பீங்கான், கோப்பை மற்றும் மலசலகூட உபகரணங்கள் முதலியவற்றிற்கு
யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், உடுப்பிட்டி, பருத்தித்துறை, காங்கேசன்துறை, உடுவில், வட்டுக்கோட்டை, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி ஆகிய தேர்தல் தொகுதிகளுக்கு
ஏக விநியோகஸ்தர்களாக
நியமனம் பெற்றுள்ளார்கள் என்பதையும்
போதியளவு பொருட்கள் உடன் விநியோகத்திற்கு இருப்பில் உள்ளனவென்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றனர்.
இப்பொருட்களை விற்பனை செய்யவிரும்பும் வர்த்தகர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுத்துமூலம் தொடர்புகொள்ளவும்.
யாழ்ப்பாண
ஐக்கிய வியாபாரச் சங்கம்
420 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

# பின் கதவை உடைத்து ரூ.26 ஆயிரம் கொள்ளை

## கிளிநொச்சி கூட்டுறவுக்கடையில்!

யாழ்ப்பாணம், வியா.

கிளிநொச்சியில் 26 ஆயிரம் ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது பின் கதவை உடைத்து நள்ளிரவில் துணிச்சலாக இக்கொள்ளை நடாத்தப்பட்டிருக்கிறது.

கிளிநொச்சி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கடையிலேயே இ பெருந்தொகையான தொகை கொள்ளையடிக்கப்பட்டது.

கூட்டுறவுச் சங்கக்கடையின் பின்பக்கக்கதவை உடைத்து துணிச்சலான முறையில் இத்திருட்டை நடாத்தியிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இங்கிருந்த இரும்புப் பெட்டியையே உள்ளே புகுந்த திருட்டுக் கோஷ்டி தூக்கிக் கொண்டு சென்று விட்டதாம்.

இந்த இரும்புப் பெட்டிக்குள் 13 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணமும் 13 ஆயிரம் ரூபாய் காசோலையும் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரவுக் காவல்காரர் ஒருவர் இருந்த போதிலும் கொள்ளையடித்தவர்கள் மிகவும் கெட்டித்தனமாக இத் திருட்டை நடாத்தியிருக்கிறார்களாம்.

யாழ் உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. பேட்டர்ஸ் பெரேரா கிளிநொச்சி உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சின்னையா ஆகியோர் இத்திருட்டுச் சம்பந்தமாக விசாரணை நடாத்திவருகின்றனர்

(8-ம் பக்கம் பார்க்க)

**தவறிவிட்டது**

கிட்பாக்(Kit Bag)31-1-71 இரவு மட்டக்களப்பிலிருந்து, யாழ்ப்பாணம் வந்த பஸ்ஸில் தவறிவிட்டது. அதற்குள் ஆங்கில சிரேஷ்ட தாரதரப்பத்திரம், நியமனக் கடிதம் வேறும் பல முக்கிய பத்திரங்களிருந்தன. தேடித்தருபவர்களுக்குச் சன்மானம் வழங்கப்படும். தொடர்புகொள்க. இ. விவேகானந்தர், தச்சன் தோட்டம், அச்சுவேலி தெற்கு. 2840

**விற்பனைக்கு**

பாவித்த (45 கலன்) வெற்று நம்கள் விற்பனைக்குண்டு. வேலை நேரத்தில் பார்வையிடலாம். மில்க் வைற் சோப் தொழிற்சாலை. யாழ்ப்பாணம். 2837

**தேவை**

பப்படம், அச்சாறு, தயாரிப்பதில் திறமையானவர்கள் வரவும். ஞானம் இன்டஸ்றியல் வேர்க்ஸ், பருத்தித்துறை. 2462

**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள சோமசெற் இல: 1ஸ்ரீ 3242 என்னும் கார் விற்பனைக்குண்டு. கீழ்க்காணும் விலாசத்திற்கு விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும். மா. தம்பிரத்தினம், பொலிஸ் நிலையத்தடி, சுன்னாகம். 2839

**சுங்க ஏல விற்பனை**

28-5-1954ம் திகதியிடப்பட்ட இல 10675 அரசாங்க வர்த்தமானியில் (பகுதி I தொகுதி II) பிரசுரிக்கப்பட்ட சுங்க ஏல நிபந்தனைக்கமைய கீழ்க்காணும் பொருள் 1971-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ம் திகதி காலை 10-00 மணிக்கு இவ்வலுவலகத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

24 மூடை கடுகு

ஒப்பம்:
எஸ் எம் ஜே. சேனரத்ன
யாழ் மாவட்ட
சுங்க சேகரிப்பாளருக்காக.
சுங்க அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
16-2-71 2780

ராணி சினிமா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி கணேஷன் - ஜெயலலிதா
நடித்த
எங்கிருந்தோ வந்தாள்

இன்று மட்டும்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ராஜன் - வாணிஸ்ரீ - சோ
சிவகுமார்-குமாரி லட்சுமி
நடித்த
அன்னையும் பிதாவும்

19-2-71நாளை முதல்
சிவாஜி கணேஷன்
நடித்த
ஜெமினியின்
விளையாட்டுப்பிள்ளை

ராஜா - யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - வீரப்பா
பி. எஸ். சரோஜா
நடித்த
கலைஞர் மு. கருணாநிதியின்
ஜெனோவா
(புதிய கொப்பி)

5-வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (கொழும்பு)
சிவாஜி
காஞ்சனா
எம். என்.
நம்பியார்
நாகேஷ்
முத்துராமன்
இன்னும் பலர் நடித்த



சி
வ
ந்
த
ம
ண்



**இலிகிதர் தேவை**

கணக்கு, நிர்வாகம் முதலியவற்றில் அனுபவமும் ஆங்கில அறிவுமுள்ள 45 வயதிற் குட்பட்ட இலிகிதர் தேவை. சம்பளம் ரூ. 125-00 — ரூ 150-00 வருட உயர்வு ரூ 5-00 பிணைரொக்கம் ரூ 500-00 இதற்கு வங்கி வட்டியுண்டு மூன்று நற்சாட்சிப் பத்திரங்களுடன் 25-2-71 க்கு முன் பதிவுத் தபாலில் விண்ணப்பிக்கவும்.

சிறில் சுவாம்பிள்ளை,
காரியதரிசி,
அடைக்கலநாயகி
சகாயநிதிச்சங்கம்
33, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
2190

சுன்னாகம்
நாகம்ஸ் சினிமா
தினசரி 3 காட்சிகள்
போயாதினங்களில் 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர் - சரோஜாதேவி
நடித்த
அரசகட்டளை

வெல்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
கல்யாணப் பரிசு

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
சிவாஜி - சாவித்திரி
நடித்த
அன்னை இல்லம்

MANOHARA
Jaffna
Daily 3 Shows
Jerry Vanvayke
Andy Griffith
in
ANGEL IN MY POCKET
(Technicolor)

REGAL Jaffna
Daily 3 shows
Poya days 10-30 a. m.
James Masor
Simone Signorel
in
THE DEADLY AFFAIR
(Technicolor)

# பதுக்கல் மோசடியை கண்டுபிடித்தனர்!

கோட்டை, புதன்

முக்கிய உணவுப் பொருட்களான மிளகாய், பருப்பு, மாசி, கருவாடு, தகரப்பால் முதலிய பல பொருட்கள் புறக்கோட்டையிலுள்ள சில கடைகளில் பதுக்கிவைக்கப்பட்டிருந்ததை கூட்டுறவு மொத்தவிற்பனை ஸ்தாபனத்தார் கண்டுபிடித்துள்ளனர்.

மேற்படி பொருட்கள் பெருந்தொகையாகப் புறக்கோட்டைப் பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக கிடைத்த தகவல்களைத் தொடர்ந்தே கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தார், விரைந்து சென்று அப்பதுக்கல் பொருட்களைக் கைப்பற்றினர். கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபன அதிபர் திரு. ஆர். ஐ. ஒபேசேகரா இந்தத் தகவலை அறிவித்துள்ளார்.

இப்பதுக்கல் பற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில் எமது ஸ்தாபனத்தார் தொடர்ந்தும் இம்முயற்சியில் ஈடுபட்டு பதுக்கலை ஒழித்துக்கட்ட முயற்சிப்பர் எனத் தெரிவித்தார்.

புறக்கோட்டையில் உள்ள பல வியாபாரிகள் உணவுப் பொருட்களை பதுக்கிவைத்துவிட்டு வேண்டுமென்றே உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாட்டை அடிக்கடி ஏற்படுத்துகின்றனர். என மேற்படி பதுக்கலைக்கண்டு பிடித்துள்ள கூ. மொ. வி. ஸ்தாபன ஊழியர்கள் தெரிவித்துள்ளவர்.

......

## "மாகாணம் தோறும் அரசாங்கம் வேண்டும்"

கோட்டை, செவ்.

"இப்போதுள்ள ஒன்பது மாகாணங்களும் ஜனநாயக சோஷலிஸ மாகாண அரசுகளாக அமையவேண்டும். இவற்றின் பாதுகாப்பு, வெளிவிவகார, நிதி அலுவல்கள் மக்களால் தெரிவுசெய்யப்படும் ஜனாதிபதியாலும், மத்திய அரசாங்கத்தாலும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். மாகாண அரசுக்கு ஒரு கவர்னரோ அரசாங்க அதிபரோ தலைவராக இருக்க வேண்டும்."

இவ்வாறு, அரசியலமைப்பு வழிகாட்டி விஷயாலோசனை அமைப்புக்குழுவுக்கு ஜனநாயக சோஷலிஸக்கட்சியின் செயலாளர் திரு விஜய இந்திரா அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## வேலைகளைத் துரிதப்படுத்த நடவடிக்கை

கோட்டை, புதன்

வீடமைப்பு இலாகா பொதுமக்களுக்கு வீடுகட்டுவதற்கு கடன் மற்றும் வசதிகளை வழங்கும் வேலையை துரிதமாக செய்வதற்கு வீடமைப்புநிர்மாண அமைச்சர் திரு. பீற்றர் கெனமன் புதிய நடவடிக்கையெடுக்கவிருக்கிறார்.

இதுவரைவீடமைப்பு இலாகாவினால் வீடுகட்டுவதற்கு முன்னர் வழங்கிய கடன்களில் ஒருகோடிக்கும் மேற்பட்ட ரூபாவை அறவிடவில்லை என மேற்படி அமைச்சைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார். அமைச்சு வீடமைப்பு இலாகாவின் கடந்தகால அலுவல்கள் யாவற்றையும் மறுபடி ஆராயவிருக்கிறது.

வீடமைப்பு இலாகாவின் வேலைகளைத் துரிதப்படுத்த என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பது குறித்து ஆராய அமைச்சுவிரைவில் மகாநாடு ஒன்றைக் கூட்டவுள்ளது.

## இலங்கையருக்கு கௌரவப்பட்டம்

பொன், பெப். 17

மேற்கு ஜேர்மனியில் உள்ள இலங்கைத் தூதுவர் திரு. எஸ். ஜே. பெரெராவிற்கு ஜெனரல் பட்டம் கொடுக்கப் பட்டுள்ளது.

இப்பட்டம் இராணுவ சம்பந்தமானது அல்ல இது ஒரு கௌரவப்பட்டமாகும். புகழ்பெற்ற மெயின் காணிவல் குழுவினரால் பன் பிரிக்கேட் ஜெனரலாகத் தெரிவு செய்யப்பட்டு திரு. பெரெரா கௌரவிக்கப் பட்டுள்ளார்.

## தினசரி சுவீப்

கோட்டை, வியாழன்

9-வது தினசரி சுவீப் இம்மாதம் 20-ம் திகதி கொள்ளுப்பிட்டியிலுள்ள தேசிய லொத்தர் சபையில் அதிஷ்டம் பார்க்கப்படும் அதிஷ்டசாலிகளுக்கு 21-ம் திகதி பரிசுகள் காரியாலத்தில் வைத்துக்கொடுக்கப்படும்.

ஸ்கிறிபிலிங் புளக்ஸ்
(SCRIBBLING BLOCKS)

மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ளோருக்கு உபயோகிக்கக்கூடிய
ஸ்கிறிபிலிங் புளக்ஸ்
(200 தாள்கள் கொண்டவை)

கீழ்க்காணும் விலையில் விற்பனைக்குண்டு:

| | | | |
|---|---|---|---|
| 1-ம் நம்பர் | 8 1/2'' | X 11'' | ரூ. 2-25 சதம் |
| 2-ம் '' | 7'' | X 10'' | ரூ. 1-75 '' |
| 3-ம் '' | 7'' | X 8 1/2'' | ரூ. 1-50 '' |
| 4-ம் '' | 5'' | X 8 1/2'' | ரூ. 1-25 '' |
| 5-ம் '' | 4'' | X 5 1/2'' | 75 '' |

மொத்தமாக எடுக்கும் வியாபாரிகளுக்கு கழிவுண்டு

ஈழநாடு
வர்த்தக அச்சகப்பகுதி
சிவன்கோவில் மேலை வீதி, யாழ்ப்பாணம்.

# பாக். தேசியசபைக்கூட்டத்தை பூட்டோ கட்சி புறக்கணிக்கும்

## அவாமிலீக்கின் 6 அம்ச திட்டத்துக்கு எதிர்ப்பு?

கராச்சி, பெப்,17

**அடுத்தமாதம் ஆரம்பமாகவிருக்கும் பாகிஸ்தான் தேசிய சட்டசபையின் கூட்டத்தை திரு. சுல்பிகார் அலி பூட்டோவின் மக்கள் கட்சி புறக்கணிக்கும்:**

கடந்த வருடம் நடைபெற்ற பொதுத்தேர்தலின் பின்னர் அடுத்த மாதம் 3-ம் திகதி தேசியசபையின் முதலாவது கூட்டம் ஆரம்பமாகவிருக்கின்றது.

கிழக்குப் பாகிஸ்தான் அரசியல் தலைவர்களோடும் மேற்குப்பாகிஸ்தான் அரசியல் தலைவர்களோடும் ஜனாதிபதி யாஹ்யாகான் ஆலோசனைகள் நடத்திய பின்னர் இந்தத் திகதியை நிர்ணயித்தார். பெப்ரவரி மாதம் கூடும் தேசிய சட்டசபை அதன் முதல் கூட்டத்திலிருந்து 120 நாட்களுக்குள் நாட்டுக்கான புதிய அரசியல் திட்டத்தை உருவாக்கி விடவேண்டும். இதற்கான பிரகடனம் ஒன்று தேர்தல் நடப்பதற்குமுன்பே வெளியிடப்பட்டது.

சமீபத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது கிழக்குப் பாகிஸ்தானில் ஷேக் முஜிபுர் ரஹ்மானின் தலைமையிலான அவாமிலீக் பெரும்பான்மை பலத்துடன் தெரிவு செய்யப்பட்டதுடன் தேசிய சட்டசபையிலும் அறுதிப்பெரும்பான்மையைப் பெற்றது. மேற்குப் பாகிஸ்தானின் முன்னாள் அமைச்சர் திரு அல்பிகார் அலிபூட்டோவின் மக்கள் கட்சி பெரும்பான்மைபலம்பெற்ற போதிலும் தேசியசபையில் அறுதிப் பெரும்பான்மையை பெறமுடியவில்லை.

ஷேக்முஜிபுர்ரஹ்மானின் அவாமிலீக் கிழக்குப் பாகிஸ்தானுக்கு சுயாட்சியும் பாதுகாப்பு வெளிஉறவு போன்ற அம்சங்களில் மாத்திரம் சமஷ்டி அமைப்பும் வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டதாய் இருக்கின்கின்றது. இதற்கான ஆறு அம்சத் திட்டம் ஒன்றினையும் அது வெளியிட்டிருக்கின்றது. ஆனால் திரு. பூட்டோவின் கட்சி இதனை எதிர்க்கின்றது.

இந்த நிலைமையில் அடுத்த மாதம் ஆரம்பமாகவிருக்கும் தேசிய சட்டசபையின் கூட்டத்தை திரு பூட்டோவின் கட்சி பகிஷ்காரம் செய்ய முடிவு செய்துள்ளது இந்தமுடிவு தவிர்க்க முடியாதது என்று திரு பூட்டோ தெரிவித்துள்ளார். தேசிய சட்டசபையை திரு பூட்டோவின் கட்சி பகிஷ்கரிப்பதினால் எழும் நிலையையும் தாக்கத்தையும் இனிமேல்தான் அறியக்கூடியதாய் இருக்கும்.

இதே சமயம் அவாமிலீக்கின் ஆட்சிமன்ற குழுவினர் டாக்காவில் கூடி தமதுகுழுவின் தலைவராக ஷேக் முஜிபுர் ரஹ்மானையே தெரிவு செய்துள்ளனர்.

### இந்திய தூதரகம்முன் ஆர்பாட்டம்

நேற்றுபாகிஸ்தானிலுள்ள இந்திய தூதரகத்தின் முன் பெரும் கூட்டமொன்று ஆர்ப்பாட்டம் செய்யமுயன்றது. தூதரகத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்த கோஷ்டியொன்றை பொலிசார் கண்ணீர்ப்புகை அடித்துக் கலைக்க நேர்ந்தது.

பாகிஸ்தான் விமானங்கள் இந்திய பிரதேசத்துக்கு ஊடாகப் பறப்பதை இந்திய அரசு தடை செய்தற்கு ஆட்சேபம் தெரிவிப்பதற்காக இந்த ஆர்ப்பாட்டத்தில் திரு பூட்டோவின் மக்கள் கட்சியைச் சேர்ந்த இரண்டு தேசிய சட்டசபை உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள் என்றுகூறப்படுகின்றது.

## 'இனி ஆயுதம் மூலம் தான் பிரச்னையைத் தீர்க்கலாம்'

### டமாஸ்கஸ் ரேடியோ

டாஸ்கஸ், பெப். 17

அமைதியாகப் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட எல்லா முயற்சிகளையும் இஸ்ரேல் நிராகரித்து விட்டது. இனி ஆயுதச் சண்டையால் தான் மேற்காசியப் பிரச்னைக்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும் என்று இன்று டமாஸ்கஸ் வானொலி ஒரு செய்தியை ஒலிபரப்பியது.

பிரச்னைக்கு உருவான முடிவு ஒன்றைக் காண்பதற்கான அடுத்த முயற்சியை எடுக்க வேண்டியது இஸ்ரேலின் பொறுப்பாகும் என்று ஐக்கிய அரபுக் குடியரசின் அதிபர் அன்வர் சாதாத் கூறியிருக்கிருர்.

### அம்மானில் சண்டை

ஜோர்டான் தலைநகரான அம்மானில் அரசாங்கபடைகளுக்கும் பாலஸ்தீனக் கொமாண்டோக்களுக்கும் தொடர்ந்து சண்டை நடைபெற்று வருவதாகச் செய்திகள் கூறுகின்றன. அம்மான் பொலிஸ் நிலையத்தின்மீது கொமாண்டோக்கள் நேற்று பலமாக தாக்குதல் நடத்தியதாகச் செய்திகள் கூறின.

லாவோஸ் தலை நகரை நோக்கி

## கம்யூனிஸ்ட் படைகள் தொடர்ந்து முன்னேற்றம்?

வியண்டியான், பெப். 17

லாவோஸ் தலைநகரை நோக்கி வடவியட்னும்படைகள் தொடர்ந்துமுன்னேறிக்கொண்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. முன்னேறிவரும்கம்யூனிஸ்ட்கள் ரொக்கட்டுகள் மூலமும் தாக்குதலை நடத்திவருவதாகக் கூறப்படுகின்றது.

இதேசமயம் லாவோஸுக்குள் நுழைந்துள்ள தென் வியட்னும் படைகள் மோசமானகாலநிலைமையை எதிர்நோக்கவேண்டியிருக்கின்றது. காலநிலை மோசமாக இருந்தாலும் அவர்கள் தொடர்ந்து முன்னேறுவதாகவும் சொலலப்படுகின்றது.

### ஜப்பானின் 2-வது செய்மதி

டொக்கியோ, பெப் 17

ஜப்பான் இரண்டாவது செய்மதி ஒன்றை விண்வெளிக்கு அனுப்பியுள்ளது.

இன்னுஞ்சில மாதங்களுள் விஞ்ஞான விண்மதியை அனுப்புவதற்கு பரீட்சார்த்தமாக இந்த செய்மதி அனுப்பப்பட்டுள்ள தென்றும் தெரிவிக்கப்பட்டது.

### ஆண்டுவிழா

ஊரதீவு, புதன்

ஊரதீவு இழந்தமிழர்மன்றத்தினரின் ஐந்தாவது ஆண்டுநிறைவு விழாவும், ஐந்தாவது கலைவிழாவும், மகாசிவராத்திரி தினமான இம் மாதம் 23-ம் திகதி கொண்டாடப்படவிருக்கிறது.

திரு.வ. நவரத்தினம் மன்றக்கொடியை ஏற்றிவைக்க உடுவில் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு.வி. சுர்மலிங்கம் குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைப்பார், அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவரும் உயர் நீதிமன்ற நியாயதுரந்தரருமான திரு. செ. கோடீஸ்வரன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ்விழாவுக்கு மன்றக் காப்பாளர் திரு சு. பாலசிங்கம் **தலைமைவகிப்பார்.**

## ஹொலிவூட் படத்தில் இலங்கைப் பெண்!

கோட்டை, புதன்

'ஹொலிவூட் படத்தில் நடிக்க இலங்கைப் பெண் ஒருவருக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவிருக்கிறது. ஆங்கிலம் பேசத் தெரிந்த அழகிய பெண் ஒருவருக்கு இச்சந்தர்ப்பம் கிடைக்கும் ஒரு முக்கிய பாத்திரத்தில் நடிக்க ஒரு இலங்கைப் பெண் தேவைப்படுவதாக புகைப்படக் கலைஞர் திரு டக்ஸ்டன் பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கையை மையமாக வைத்து எடுப்பதற்கான படத்தில் இலங்கைப்பெண் ஒருவர் தேவைப்படுகின்றதாம். சுவிஸில் தயாரிக்கப்படும் இப்படம் சர்வதேச வெளியீடாக இருக்கும் இலங்கையைப் பற்றிய படப்பிடிப்பு வேலைகளுக்கு திரு. எம். இராமேஸ்வரன் பொறுப்பாக இருப்பார் எனத் தெரியவருகின்றது.

கதாநாயகி பாத்திரம் மட்டுமல்ல மற்றும் சில பாத்திரங்களுக்கும் இலங்கையைச் சேர்ந்தவர்களே தெரிவு செய்யப்பட உள்ளார்கள்.

### அலங்காரப்பொருள் ஆராய்ச்சி நிலையம்

கோட்டை, புதன்

சிறுகைத்தொழில் கூட்டுஸ்தாபனம் அலங்காரப் பொருள் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைக்கவிருக்கின்றது.

அடுத்தமாதம் தொடக்கம் இவ்வாராய்ச்சி நிலையம் வெலோறுவில் இயங்கும் எனத் தெரிய வருகின்றது.

வீட்டு உபயோகத்திற்கு தேவையான மேசைவிரிப்புக்கள் ஜன்னல் சீலைகள், கேட்டின்கள், மற்றும் அலங்காரச் சட்டைகள் உற்பத்தி செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சிறுகைத் தொழில் பொருட்களின் சந்தையை இத்தகைய ஆராய்ச்சிநிலையம் விரிவு படுத்தும் எனக் கூற படுகின்றது. புதிய முறையில் உற்பத்திமாதிரிகளை மாற்றிக்கொள்வதின் மூலம் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளைக் கவர முடியும் எனக் கூறப்படுகின்றது.

சந்திரனில்

### சூரியகிரகணம் ஏற்படுவதுஏன்?

மாஸ்கோ, பெப் 17

சந்திரனில் சூரியகிரகணம் ஏற்படுவதிலுள்ள முக்கிய காரணங்களை சோவியத்விஞ்ஞானிகள் அறிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் அண்டவெளியின் ஆராய்ச்சிக்கென அனுப்பிவைக்கப்பட்ட லூனகொட் அனுப்பியுள்ள தகவல்களிலிருந்து விஞ்ஞானிகள் முக்கிய காரணங்களை அறிந்துள்ளதாகத் தெரிகிறது.

### ஓய்வுபெறும் மேற்றிராணியார்

வத்திக்கான், பெப் 17

கேரளாவில் விஜயபுரம் மேற்றிராணியார் ஓய்வு பெறுகிருர். ஓய்வு விரும்புவதாக அவர் விடுத்த விண்ணப்பத்தை பாப்பாண்டவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

கேரளத்திலிருந்து கன்னியாஸ்திரிகள் ஐரோப்பாவுக்கு கொண்டு போகப்படுவதாக சமீபத்தில் கிளப்பிய பிரச்னைகளில் 67 வயதான இந்த மேற்றிராணியாரின் பெயரும் பெரிதாக அடிபட்டது.

புகைவண்டியில் தீப்பிடித்தது

### 34 பிரயாணிகள் மரணம்

பெல்கிரேட், பெப் 17

ஸெனிகா என்ற இடத்தில் சுமார் ஒரு மைல் நீளமான குகையினூடாக புகைவண்டி ஒன்று சென்று கொண்டிருக்கையில் வண்டியில் தீப்பற்றிக்கொண்டது. இத்தீவிபத்தினால் 34 பிரயாணிகள் மாண்டனர். 120 பேர் எரிகாயங்களுக்குள்ளாகினர். தீயணைப்புப் படையினர் சுமார் எட்டுமணித்தியாலங்கள் வரை போராடி தீயை அணைத்தனர். மின்சாரக் கோளாறினால் இத்தீவிபத்து ஏற்பட்டதெனத் தெரியவருகிறது.

### இவர்கள் அவதி

சுழிபுரம், புதன்

பொன்னாலை கிருஷ்ணன் கோவிலடிக்கு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள வீதியால் இ. போ. சபையினர் பல காலமாக தினமும் பஸ் சேவை நடாத்தி வந்தனர். ஆனால் கடந்த சில தினங்களாக எவ்வித அறிவித்தலும் இல்லாமல் முற்றாக பஸ்சேவை நிறுத்தப்பட்டுளளது. இதனால் பொது மக்கள் பெரிதும் அவதிப்படுகின்றனர். பொன்னாலை மக்கள் பழையபடி மூளாய் வந்து பஸ் ஏறவேண்டியுள்ளனர். மீண்டும் இந்த பஸ் சேவையை உடன் நடாத்துமாறு சுழிபுரம் கிராமசபையினர் வடபகுதி இ. போ. ச. முகாமையாளரை வேண்டினனர்.

### கேரதீவில் காணி

வேலணை, விழாமுன்

கேரதீவிலுள்ள காணிகளை மக்களுக்குக் கொடுப்பதற்கு விரைவில் காணிக்கச்சேரி நடத்த ஒழுங்கு செய்து தருமாறு திரு: கா. பொ. இரத்தினம் எம்.பி: வடமாகாண அரசாங்க அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்

**மணிவாக்கு**

மனிதன் வெறும் உணவின் உதவியால் மட்டும் உயிர்வாழவில்லை. தேவனின் திருவாயிலிருந்து வெளியாகும் அருள்மொழிகளாலும் உயிர் வாழ்கின்றான். — இயேசுநாதர்.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் மாசி மாதம் 6ந் திகதி (18-2-71)

## வீடமைப்புக் கடன் நிலுவை

வீடமைப்புக்கென கடந்தகாலத்தில் வழங்கப்பட்ட பணத்தில் பத்தரைக் கோடி ரூபாய் இன்னும் வசூலிக்கப்படாமலிருப்பதாகவும் இதனால் வீடமைப்புக் கடன் வசதி சம்பந்தமான திட்டம் முழுவதையும் திருத்தியமைப்பதற்கு வீடமைப்புக் கட்டட நிர்மாண அமைச்சர் தீர்மானித்திருப்பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

வீடில்லாப் பிரச்னை தீராத பிரச்னையாக இருந்து வருகிறது. இன்றைய கூட்டணி அரசாங்கம் மட்டுமல்ல, இதற்கு முந்திய அரசாங்கங்களும் வீடில்லாப்பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்காக என்னென்ன திட்டங்கள் எல்லாமோ வகுத்தன; வெளிநாடுகளுக்குச் சென்று ஆலோசனையும் கோரிவந்தன. இன்றைய அரசாங்கம் ஆட்சிபீடத்துக்கு வந்ததும் ஜேர்மனியிலிருந்தும் ருஷ்யாவிலிருந்தும் வீடமைப்புப் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்கு ஆலோசனைகளும் உதவிகளும் கிடைக்குமெனக் கூறப்பட்டது. வீடமைப்பு இலாகாவை புனரமைப்புச் செய்யும் வேலைகள் இப்போதுதான் முடிவடைந்திருப்பதாகவும் இனி வீடில்லாப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் சில வாரங்களுக்கு முன் வீடமைப்பு அமைச்சர் தெரிவித்திருந்தார். வீடமைப்புக் கடன் சுலபமாகப் பெற வசதிசெய்யப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

கடன் வழங்குவதன் மூலம் வீடில்லாத் திண்டாட்டத்தை நீக்கிவிடமுடியாதென்றும் கடன் தொகையையும் வட்டியையும் செலுத்துவதிலேயே வீடு கட்டியவரின் உழைப்புச் செலவாகி அவர் என்றும் கடன்காரராகவே வாழவேண்டிய நிலையிருக்குமென்றும் நாம் முன்னரும் இதேபத்தியில் குறிப்பிட்டிருந்தோம். பத்தரைக் கோடி ரூபாய் வீடமைப்புக் கடன் நிலுவையாக இருக்கிறதென்பது நாம் முன்னர் குறிப்பிட்டதை நிரூபிப்பதாக இருக்கிறது.

வீடமைப்புக்கடன் வழங்குவதற்குப் பதிலாக வீடமைப்பு இலாகாவே — அரசாங்கமே — வீடுகளைக் கட்டிக் கொடுத்து மாதாமாதம் வாடகையாகப் பணத்தை வசூலித்து ஒரு குறிப்பிட்ட வருடங்களின் பின் அந்த வீட்டின் குடியிருப்பாளருக்கே அந்த வீட்டை உரிமையாக்கிவிடுவதாயின் ஒவ்வொருவருக்கும் சொந்த வீடும் கிடைக்கும். கடன் பணத்தை வசூலிக்க முடியவில்லையே என்ற கவலையும் அரசாங்கத்துக்கு இல்லாமல் போகும்; வீடில்லாப் பிரச்னையும் நீங்க வழிபிறக்கும்.

வீடமைப்பு அமைச்சர் புதுக்கி அமைக்கவிருக்கும் திட்டம் அரசாங்கமே வீடுகளைக் கட்டிக்கொடுத்து வீடில்லாதவர்களுக்கு அவற்றை உரிமையாக்கக் கூடியதாக இருந்தால் மக்கள் நிச்சயம் அதை வரவேற்று, அத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற உதவியும் ஒத்துழைப்பும் அளிப்பார்களென நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

கடன் வழங்கும் திட்டத்தைக் கடுமையாக்குவதனாலோ முன்னர் எப்படிக் கடன் வழங்கப்பட்டதென்பதை ஆராய்வதனாலோ இலாகாக்களை மாற்றியமைப்பதனாலோ வீடில்லாப் பிரச்னைக்குத் தீர்வு காணமுடியுமென நினைப்பதால் பயன் கிடைக்குமென எதிர்பார்க்கமுடியாது. கடந்தகால அனுபவங்கள் இதற்குச் சான்று.

## 'சோஷலிஸப்பாதையிலேயே தொழிலாளருக்கு விடிவு'

— வி. பொன்னம்பலம்

(நமது நிருபர் கு. வி. ம)

யாழ்ப்பாணம், வியா.

"சோஷலிச நாடுகளில் வாழும் தொழிலாளர்கள் பலவசதிகளுடன் வாழ்கின்றார்கள். சோஷலிசத்தை நிலைநிறுத்திக் கொள்ளாதவரை தொழிலாளர்களுக்கு விமோசனமில்லை. தொழிலாளர் உரிமை பெற போராட்டமே ஒரேவழி. தொழிலாளர் வர்க்கம் தற்போதான் இந்நாட்டில் இணைந்து செயற்பட ஆரம்பித்துள்ளது. தொழிலாளர்கள் இணைந்து நன்று தமது உரிமைகளைத் தட்டிக்கேட்க வேண்டும்"

இவ்வாறு வடபகுதி கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு வி. பொன்னம்பலம் லங்கா தொழிலாளர் சம்மேளன யாழ் கிளைக் கூட்டத்தில் பேசினர். நகரமண்டபத்தில் நடைபெற்ற இம்மகாநாட்டிற்கு திரு கவத்திலிங்கம் தலைமைவகித்தார்.

தொடர்ந்து பேசும்போது அவர் கூறியதாவது;

தொழிற்சங்கம் பற்றி பேசுபவர்களைத் தூக்கிலிடும் காலம்ஒன்றிருந்தது. ஆனல் காலம் மாறிவிட்டது. செங்கொடியைக் கண்டு சிலர் மருண்டு விடுகின்றனர். அதன் அர்த்தம் புரியாமல் அவ்வாறு செய்கின்றார்கள். உழைப்புக்கும், தியாகத்திற்கும் அடிப்படையாக இருக்கும் தொழிலாளர்களின் இரத்தத்தை குறிப்பதே செங்கொடி.

இன்று தொழிலாளர்கள் பெற்ற உரிமைகள் எல்லாவற்றுக்கும் போராட்டமே அடிப்படையாக அமைந்துள்ளது. இதனால்தான் ஆசிரியர்களும் தொழிற்சங்க அமைப்பை ஏற்படுத்திக்கொண்டார்கள். இன்று தொழிலாளர்கள் ஒரே அணியில் திரண்டுள்ளார்கள்.

தொழிலாளர்கள் இல்லாமல் முதலாளி தோன்ற முடியாது. மார்க்ஸிய சித்தாந்தப்படி முதலாளி என்பவர் திருட்டின் தேட்டம் ஆகும். சில நேர்மையான முதலாளிகள் நாட்டின் நலன்கருதி இயங்கி தொழில் வளம் பெருக உதவவேண்டும். நாட்டின்வளர்ச்சிக்கு தொழிலாளர் பங்குமுக்கியமானது. பதுக்கல்காரர்களைக் கண்டுபிடித்து தொழிலாளர்கள் உதவவேண்டும்.

சமுதாய அமைப்பை மாற்றி புதிய சோஷலிச சமுதாயத்தை நாம் கட்டி எழுப்பவேண்டும். அவற்றிற்கு தொழிலாளர்கள் பங்கு முக்கியமானது.

இச் சம்மேளன மகாநாட்டில் தொழிற்கந்தோர் உதவி ஆணையாளர் திரு ஆ. சச்சிதானந்தம் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

### இன்று நினைவு தினம்

## ஸ்ரீ இராமகிருஷ்ணபரமஹம்சர்

— கனக சரவணபவன் —

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' ஆத்மஜோதியின் இருப்பிடமான இராமகிருஷ்ண பரமஹம்சரை பெற்றதனால் தவப்பயன் பெற்றது.

அருள், ஞானம், சாந்தி, சத்தியம், பகவத் சம்பத்தும் என்பனவற்றின் உறைவிடமான ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் 1836ம் ஆண்டு மாசி மாதம் 18ந் திகதி மேதினியில் சாந்தியுடன், ஞான ஒளியையும் பரப்ப அவதரித்தார்.

உயிர்களின் வளமைமிக்க இளமைக் காலத்திலே ஐம்புலனடக்கத்துடன் பக்தியும் வைராக்கியமும் பின்னிப் பிணைந்து காணப்பட்டது. கதாதரன் என இளமைப் பிள்ளைப் பெயர்பெற்ற இராமகிருஷ்ணர், உலக இன்ப வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைந்த பள்ளிப் படிப்பை வெறுத்ததோடு கணிதத்துறையில் இருந்தும் விடுபட்டார். சாந்தியின் நிழலிலே வாழ விரும்பிய இவர், அருட்பெரும் சோதியான இறைவனின் பாதங்களை அடையும் ஞானக் கல்வியையே தேடியலைந்தார்.

ஞானம் என்பது மோன வரம்பு. இதை நன்கு கருத்திலமைத்த ஸ்ரீ இராமகிருஷ்ணர் மோனநிலையை நன்கு கடைப்பிடித்தார். அவருக்குச் சாந்தியும் கிட்டியது.

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொள்ளும் சைவம், இவரின் கண்களுக்கு கரைகாணாக் கடல் போலக் காணப்பட்டது. தத்துவங்களையும், உண்மை நெறிகளையும் ஆங்காங்கு மூழ்கி எடுத்து உண்மை உபதேச மூலக் கருவாக அமைத்து வெளியிட்ட பொன்மொழிகளைப் பிற மதத்தினரே பேணிப் போற்றுகின்றனர்.

இல்லறத்தில் இருந்து நல்லறம் புரியும் வகையில் இவரது வாழ்வு மாறியமைந்தது. ஞானத் தன்மையால் தன் வாழ்க்கைத் துணைவியின் இருப்பிடத்தை அறிந்து பெற்றோர் முன் திருமணம் செய்தார். அன்பும், அறனும் பின்னிப் பிணைந்த ஜெயராம பட்டினத்திலே சாரதாதேவியாரை மணந்துகொண்டார். உள்ளத்தால் ஒன்றுகிய இருவரும் இன்ப இணைப்பில் இணையவில்லை.

வள்ளுவன் கண்ட பெண்மையைப் பெற்ற இவர் தன் இலட்சியத்தினை திறம்பட நடத்தினர். இல்லற இன்பத்தில் இமையளவும் இளகாத இராமகிருஷ்ணர் இந்திய வரலாற்றில் மட்டுமல்லாது, இந்து சமயத்திலே இரண்டறக் கலந்தார்.

"அழகைச் சுவைப்பது காதல்; அதன் மேற் செல்லல் காமம்" என மாந்தருக்கு வழிகாட்டிய அவர், தானும் வாழ்ந்து காட்டியது அவரை மனிதகுலத் தெய்வமாகப் போற்றச் செய்தது.

ஆத்ம சோதனையைத் திறம்பட ஏற்றி, நற்றிர்வைகண்ட இவர் தொடர்ந்து 6 வருட காலமாக நிஷ்டையிலே இருந்து மோனத்தின் வாயிலாகப் பக்குவம் அடைந்தார், அவரது சேவையின் காரணியால் வங்கத்துச் சிங்கமெனச் சிக்காகோவில் பெயர் பெற்ற வீரர் விவேகானந்தர் தோன்றினர்.

இலட்சிய வழியில் பிசகாமல் வாயாலும், மெய்யாலும் மனித குலத்தைக் கவர்ந்த இராமகிருஷ்ணரது செயல், நெறிகள் என்பன கடவுளை நோக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் கடுப்பொருளாக அமையும் அவரது அருள் மொழிகள் என்றும் மக்கள் மனதில் நின்று நல்வழி காட்டட்டும்.

## தட்டுப்பாடு நீங்கும்

கோட்டை, புத...

இம்மாதஇறுதிக்குள் றப்ப... உற்பத்திக்குத் தேவையா... அசிடிக் அமிலம் இற... மதிசெய்யப்படவிருக்கிற...

சமீபகாலத்தில் இ... அமிலத்துக் கேற்பட்டுள்... தட்டுப்பாட்டால் றப்... உற்பத்தி பெரிதும் பாதி... கப்பட்டது. அமிலத்தி... தட்டுப்பாடு விரைவி... நீங்க விருப்பதால் இ... நிலைமை நீடிக்காது என... தெரிகிறது.

அரசாங்கம் மேற்ப... அமில இறக்குமதிக்காக... றப்பர் உற்பத்திஸ்தாபன... களுக்கு அங்கீகாரம் வழ... கியுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் நாகசுர தவில்பாடசாலை நிறுவகோரிக்கை

மாவிட்டபுரம், புத...

'பாரம்பரியமாக ஈழத்தில் வளர்ந்துவந்த நாகசுரக்கலை இன்று சில கலைஞர்களின் சுருதிமாற்றத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே சகல நாகசுரக்கலைஞர்களும் விழாக்களில் ஒரே சுருதியில் நாகசுரத்தைக் கையாள அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்'

இவ்வாறு அகில இலங்கை இசையாளர் சங்கம் யாழ். நகருக்கு விஜயம் செய்த கல்வி, கலை விசாரணைக்குழுவுக்கு சமர்ப்பித்த மகஜரில் கேட்டுள்ளது.

மேற்படிசங்க செயலாளர் திரு எஸ் ஆர் ஞானசுந்தரத்தால் சமர்ப்பிக்கப்பட்ட இம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

'இன்று ஈழத்தில் நாகசுரக் கலைஞர்களில் ஒருசாரார் பாரி (தக்கு சுருதி) நாகசுரத்தையும், வேறொரு சாரார் திமிரி (எச்சுருதி) நாகசுரத்தையும் கையாளுவதால் நாகசுரக்கலை வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே பாரம்பரியமாக வளர்ந்துவந்த நாகசுரக்கலைவளர சகல கலைஞர்களும் இசையரங்கில் ஒரேசுருதி நாகசுரம்வாசிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையில் நிகழும் மங்களவைபவங்களுக்கு தேவையான நாகசுர, தவில் கலைஞர்கள் போதாமல் இருக்கின்றார்கள் இன்று இங்கு இத்துறையைப் போதிக்க நல்ல பயிற்சியாளர் இல்லாமையாலும், இந்திய கலைஞர்கள் இங்கு வந்து மாதக்கணக்கில் தங்குவது தடை செய்யப்பட்டதாலும் இசை மாணவர்கள் இந்தியாவுக்கு சென்று கலைபயில செலாவணி போன்ற தடைகள் இருப்பதாலும் இங்கு இளம் கலைஞர்கள் நல்ல பயிற்சி பெற முடியாது இருக்கிறது ஆகவே இன்று இங்கு ஏற்பட்டுள்ள தேவையைப் பூர்த்தி செய்ய கலைஞர்களை உ... வாக்க யாழ்ப்பாணத்தி... நாகசுர தவில் இசைப் பா... சாலை ஒன்றை அமைத்து தரவேண்டும். இப்பாடசா... யில் பேராசிரியர்களாக இ... தியாவிலிருந்து கலைஞர்... னர்களை அழைக்கவேண்டு...

தரமான நாகசுர, தவி... கலைஞர்களை தேர்தெடு... அரசாங்கஉதவி நன்கொடை வழங்கி தமிழ்நாட்டில் உ... தர விசேஷ பயிற்சிபெ... வசதிசெய்யவேண்டும்.

அகில உலகத் தவில் வி... வான் உட்பட சிறந்த ... மான நாகசுர, தவில் க... ஞர்கள் இங்குஇருக்கிறார்க... இவர்களின் திறமை... வெளிநாட்டு மக்களுக்... எடுத்துக்காட்ட இவர்க... அரசாங்க செலவில் வெ... நாடுகளுக்கு அனுப்பவேண்டும்.

## நாட்டின் அபிவிருத்திக்கு பொலிஸாரும் சிரமதானம்

கோட்டை, புத...

பொலிஸ் ஊழியர்க... இனிமேல் சிரமதான வேலை... ளில் ஈடுபடவுள்ளனர். இ... களும் பொதுமக்களோ... ஒத்துழைத்து நாட்டின் அ... விருத்திக்காகச் சிரமதான... தில் ஈடுபடுவர்.

முக்கியமாக இச்சிரமதா... வேலைகள் கிராமப்புற... களை அபிவிருத்தி செய்... நடைபெறவுள்ளது.

நாட்டின் ஒவ்வொரு பிரி... லும் உள்ள பொதுமக்க... தொடர்பு பிரிவுகளின் ... மேற்படி சிரமதான வே... கள் நடைபெறவுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் ... படுத்தப்படும் பொலி... ருக்கு உதவிபொலிஸ் இன்... பெக்டர்கள் பொறுப்பதி... ரிகளாகக் கடமையாற்றுவ...

பொலிஸ் தலைமைக் கா... ரியாலயத்தின் பொதுமக்... தொடர்பு பகுதியைச் சே... ர்ந்த உதவிப் பொலிஸ் அ... பர் திரு. எச். பி. திஸ... யக்கா சிரமதான இயக்க... தில் ஈடுபடும் பொலிசா... மக்களது நம்பிக்கைக்கு... ளாக வேண்டும் என வ... புறுத்தியுள்ளார்.

## கலாசார திரைப்படம்

யாழ்ப்பாணம், விய...

தொல்புரம் மத்திய ச... சமூக நிலைய முன்றலி... இன்று மாலை பிரிட்டனி... கலைகலாச்சார சம்பந்தமா...

### வடபகுதியில் குற்றங்களை ஒழிக்க

## டாக்ஸி சாரதிகள் உதவியை கோருகிறார் பொலிஸ் அதிபர்

யாழ்ப்பாணம், வியாழன்

வடபகுதியில் நடக்கும், கடத்தல், பெண் கடத்தல் போன்றவற்றுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு வடபகுதி டாக்சி சாரதிகளின் உதவியைக் கோரினர், வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம்.

நேற்றுக் காலை வடபகுதிப் பொலிஸ் அதிபர் காரியாலயத்தில் நூற்றுக்கு மேற்பட்ட டாக்சி சாரதிகள் கூடி, பொலிஸ் அதிபருடன் பேசினர்கள்.

உதவிப் பொலிஸ் அதிபர் திரு. பேட்டர்ஸ் பெரேரா, தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு உபாலி விஜயரத்னு, இன்ஸ்பெக்டர் திரு. குருசாமி ஆகியோர் இப் பேச்சு வார்த்தையின்போது கூட இருந்தார்கள்.

டாக்சி சாரதிகள் பொது மக்களுக்கு உண்மையான, நேர்மையான சேவையை அளிக்கவேண்டுமெனப் பொலிஸ் அதிபர் டாக்சி சாரதிகளைக் கேட்டுக்கொண்டார்.

பொலிஸாருடன் டாக்சி சாரதிகள் முழு மனத்துடன் ஒத்துழைத்தால் சட்ட விரோதமான செயல்களையும், குற்றங்களையும் ஒழித்துக்கட்டிவிடலாம் என்றார் அவர்.

கொள்ளை, திருட்டு நடத்துபவர்களுக்குச் சில டாக்சி சாரதிகள் உடந்தையாக இருப்பதாகப் புகார்கள் தெரிவிக்கப்படுவதாகவும், இவற்றைப் போன்ற பாரதூரமான செயல்களுக்கு உதவுவதை டாக்சி சாரதிகள் நிறுத்தவேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தார், பொலிஸ் அதிபர்.

தனிப்பட்ட கார்க்காரர்கள் தமக்கு இடைஞ்சலை ஏற்படுத்துவதாக பொலிஸ் அதிபரிடம் டாக்சி சாரதிகள் புகார் தெரிவித்தனர். நடவடிக்கை எடுப்பதாக எஸ் பி தெரிவித்தார்.

டாக்சியில் பயணம் செய்வோருடன் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும் என்று பொலிஸ் அதிபர் கேட்டுக்கொண்டார்.

டாக்சி சாரதிகள் நேற்று தமக்கென்று யூனியன் ஒன்றும் அமைத்துக்கொண்டனர்.

நிர்வாகிகள் வருமாறு: தலைவர்: திரு. துரையப்பா சிவரத்தினம், காரியதரிசி: கந்தையா நல்லைநாதன், தனாதிகாரி: சரவணமுத்து கந்தசாமி. நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

# திருக்கேதீச்சரத்தான் பெருமையை ஓங்க வைப்போம்

தொண்டர் நாள்தொறுந் துதிசெய அருள்செய் கேதீச்சரமதுதானே'' என்கிறார். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

மன்னாரில் பாலாவி என்னுமிடத்தில் சைவசமயத்தோரின் முழுமுதற் கடவுளாம் சிவன் எழுந்தருளியிருக்கும் திருக்கேதீச்சரத் தலம் நாயன்மார் பாடல் பெற்ற தலம் ஒன்பது யாவரும் அறிந்ததே. திருக்கேதீச்சரப் பெருமானின் மகிமையை இதனால் உணரலாம். ஆனால் பிறநாட்டாரின் ஆதிக்கத்தினால் நாம் அடங்கியொடுங்கிப் போயிருந்தோம்; எமது மொழியும் சமயமும் மங்கிக்கொண்டே சென்றது'

இலங்கை சுதந்திர நாடாகியபின்னர் இலங்கைவாழ் மக்கள் தங்கள் தங்கள் மொழி, சமயம் முதலியவற்றை வளர்ப்பதற்கும் காப்பாற்றுவதற்கும் தொண்டிக்கும் பொழுது தமிழ் மக்களாகிய நாங்கள் எமது மதத்தையும் மொழியையும் பேணி வளர்ப்பதற்கு மற்றவர்களின் பின்னேயே நிற்கின்றோம், காரணம், எடுக்கும் முயற்சிகளைச் செவ்வனே செய்வதற்கு, ஒத்துழைப்பும், ஆக்கமும் ஊக்கமும் கொடுப்பதற்குத் தவறுகின்றோம் என்பதே. எங்கள் சமயத்தை நாங்கள் வளர்ப்பதற்குத் தெண்டிக்கின்றோமில்லை. இதன் காரணமாக சைவத்தலங்கள்பறிபோயும் பறிபோகும் நிலைகளிலும் உள்ளன. வெளிநாடுகளிலுள்ள, குறிப்பாக இந்தியாவில் உள்ள கோயில் கோபுரங்களைப் பற்றிப் பேசிப்பெருமைப்படுகின்றோம். ஆனால் அதே பிறநாட்டில் ஈழநாட்டின் தலப்பெருமையை அறிந்த நாயன்மார் பாடிப் போற்றினார்கள் என்றால்; இன்றும் நாம் ஒன்று சேர்த்தால் பிற நாட்டார் மேலும் போற்றக் கூடியவகையில் கோவில் கோபுரங்களை நிறுவலாம் என்பதை நாம் யோசிக்க வேண்டும் அப்படி யோசித்திருந்தால் அரசியல் வாதிகள் உட்பட நாம் எல்லோருமே பாடல் பெற்ற தலமாகிய திருக்கேதீச்சரத்தைப் புனர்நிர்மாணிப்பதற்கு இவ்வளவு காலமும் பொறுத்திருக்க மாட்டோம்

திருக்கேதீச்சரப் புனா நிர்மாணிப்புச்சபை 1948-ம் ஆண்டளவில் தாபிக்கப்பட்டதெனினும் அதன் சேவை இன்னும் முற்றுப்பெறவில்லை இச்சபை கோவிலின் ஒரு பகுதியை இதுவரை முடித்ததுடன். அத்தலத்தின் மகிமை குன்றாமல் அத்தலத்தைப் பாதுகாக்கும் பெரும்பணியும் இச்சபையைச் சார்ந்ததே. ஆகவே மேற்கொண்டு தண்ணீர் விநியோகம், தபால் தந்திச் சேவை, போக்குவரத்து வசதி, சமயப் பள்ளிக்கூடம் சமயத்தைப் பரப்புதல் ஆகியவற்றையும் செய்துள்ளது.

ஆனால் பல அன்பர்களினதும் ஊக்கத்தையும் ஒத்துழைப்பையும் தாங்களே முன்வந்துதவும் பலரின் பெருந்தன்மையையும் கண்டசபை மேலும் காலம் தாழ்த்தாது இரண்டொரு வருடத்திற்கும் இப்பணியைச் செய்வனே முடிக்கும் நோக்கம் கொண்டுள்ளது. இதை மனதில் வைத்துசபையினர் இலங்கை முழுவதிலும் பிரதேசக் குழுக்களை அமைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இக்குழுக்கள் பல அன்பர்களையும் நரடித் தொடர்பு கொண்டு பொருளுதவி முதலியன பெற முனைந்திருக்கின்றார்கள். யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு தெற்கு ஆகியன இவைகளில் சில குழுக்களாகும்' சபையின் முதல்நோக்கம் பலரை இச்சபையின் அங்கத்தவர்களாக்குதலாகும். ஒருவரின் அங்கத்துவ சந்தாப் பணம்வருடமொன்றிற்கு 12 ரூபா வாகும்.

எதிர்வரும் மகா சிவராத்திரியின்போது கேதீச்சரத்தில் பல அன்பர்களை அங்கத்தவர்களாக்க சபை யோசனை கொண்டுள்ளது. திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரியி போது அங்கத்தவர்களைச் சேர்க்கும் பொறுப்பை தென்கொழும்பு பிரதேசக்குழு எற்றுமுன் வந்துள்ளது. பல இடங்களிலிருந்தும் இங்கு அன்பர்கள் வருவதால் இவ்வன்பர்களை அங்கத்தவர்களாக்குவதன் மூலம் பிரதேசக்குழுக்களை பிற இடங்களிலும் தாபிப்பதற்கு ஏதுவாக அமையுமெனக் கருதப்படுகிறது.

எங்கள் சமயத்தையும், புனித தலங்களையும்பேணிப் பாதுகாப்பது ஒவ்வொரு சைவசமைய அன்பனிரதும் கடமையாகும். ஆகவே சைவசமய அன்பர்கள் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற உதவிகளைப் புரிந்து ஈழத்திருநாட்டின் திருக்கேதீச்சரத்தானின் பெருமையை ஓங்குவிப்போமாக.

—மு. இரா

## சிவராத்திரி ஒன்றே போதும்

பொங்கியெழும் இன்னல்பல பெருகிவரும் போதும்
மங்காத அருள்யானை முகனருளே போதும்
சிங்கமெனச் சீறிஅறி செருவீர்வரும் போதும்
புங்கவிபால வேல்முருகன் காவல்பெறின் போதும்.
செங்கதிரோன் மங்கிடவே சேதமுறும் போதும்
சங்கரிதன் அருள்சுரந்து சரணளித்தால் போதும்
கங்கைவளர் சிவன் இரவில் கடைவிளிக்கும் போதும்
எங்குநிறை ஈசனருள் ஒன்றிருந்தால போதும்.

'நல்லூரான் வெற்றி வேலன்'

## 'துக்ளக்' பத்திரிகை ஆதரவு ஆர்ப்பாட்டம்

சென்னை பெப் 17 சிரிப்பு நடிகர் சோ'வின் "துக்ளக்' பத்திரிகையின் கடைசிப் பிரதிக்கு தமிழ் நாட்டு அரசு தடைவிதித்ததை எதிர்த்து தமிழ் நாட்டில் பல இடங்களில் ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் நடைபெற்றுள்ளன.

திருச்சிராப்பள்ளியில் பதட்டநிலைமை இருந்துவருகின்றது. க லூரிகள்பலவும் மூடப்பட்டுள்ளன.

உதகமண்டலம், தஞ்சை போன்ற இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றுள்ளன, சென்னையில் மாணவர்கள் ஊர்வலமாகச் சென்று பொலிஸ் நிலையத்தில் மனு வொன்றைகொடுத்தனர். 'துக்ளக்' பத்திரிகை மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை திரும்பப் பெற்றுக் கொள்ளும் படி அவர்கள் கேட்டுள்ளனர்.

மதுரையில் தமிழ் காப்பு இயக்கத்தினர் அரசாங்கத்தின் நடவடிக்கையை ஆதரித்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தினார்கள்.

## இவ்வருடம் 55 வயதா?

### இவர்களுக்கு ஒரு வருடம் நீடிப்பு

கோட்டை, புதன் இந்த வருடம் 55 வயதையடையும் அரசாங்க ஊழியர்கள் அதிர்ஷ்டக்காரர்களாகும். இவர்களது சேவையை அரசாங்கம் ஒரு வருடம் நீடிக்க இருக்கிறது.

1971-ம ஆண்டு பெப்ரவரி 12-ம் திகதிக்கும் டிசம்பர் 31-ம் திகதிக்கும் இடையில் 55-வது வயதை அடைபவர்களுக்கே மேற்படி சேவை நீடிப்பு நடைபெற இருக்கிறது.

அரசாங்க தொழிற்சங்கங்கள் 55 வயதில் ஓய்வுபெற வேண்டுமென்ற விதியை மறுபரிசிலனைசெய்யும்படி கோரியதைத் தொடர்ந்தே அரசாங்கம் மேற்படி சேவையை அதிகரித்துள்ளது.

இதற்குமுன்னர் 1970-ம் ஆண்டு 55 வயதைஅடைந்தவர்களுக்கு அரசாங்கம் ஒரு வருடகால நீடிப்பை வழங்கியிருந்தமை யாவரும் அறிந்ததே.

திங்கட்கிழமையன்று அரசாங்கம் கடைசியாக எடுத்த மேற்படி நடவடிக்கை நிரந்தரக் காரியதரிசிகள் இலாகாக்களின் அதிபர்கள் ஆகியோர் மத்தியில் அறிவிக்கப்பட்டது.

## ரயில் பிரயாணிகளை அவதிக்குள்ளாக்காதீர்!

### வடபகுதிபொலிஸ் அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு பிரயாணம் செய்யும் பிரயாணிகளை தகவல்களின்றி சோதனைக்குள்ளாக்க வேண்டாமென்று வடபகுதி பொலிஸ் அதிபர் திரு ஆர் சுந்தரலிங்கம் கோரியிருக்கிறார்.

கொழும்பு பொலிஸ் சுப்ரீண்டனுக்கு எழுதியுள்ள கடிதமொன்றிலேயே அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

கோட்டை ரயில் நிலையத்தில் யாழ்ப்பாணப் பகுதிப் பிரயாணிகள் அவதி' என்ற தலைப்புடன் 16ம் திகதி வெளியான 'ஈழநாடு' செய்தியை வடபகுதி பொலிஸ் அதிபர் சுட்டிக்காட்டி, இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட பிரயாணிகள் சிலரும் தமக்குப் புகார் செரிவித்திருப்பதாகவும் சரியான தகவல்களின்றி பிரயாணிகள் எல்லாரயுமே சோதனைக்குள்ளாக்கி அவதிக்குள்ளாக்குவது பிரயாணிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்துவதாகவுள்ள தென்றும் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்ட ஒருவர் சந்தேகத்துக்கிடமானவரெனத் தகவல் கிடைத்ததை வைத்துக்கொண்டு அவரை சோதனையிடுவதற்குப் பதிலாக எல்லாப்பிரயாணிகளையும் சோதனையிட்டுத் தொல்லைப்படுத்துவது பிரயாணிகளுக்கு தொல்லையையும் கஷ்டத்தையும் ஏற்படுத்துவதாக இருக்குமென்று தெரிவித்துள்ளார் வடபகுதி பொலிஸ் அதிபர்.

## ஜெயராஜ் எழுதுவது:

காலி சிவன் கோவிலில் நடைபெற்ற கும்பாபிஷேகத்துக்குச் சென்று திரும்பிய ஓர் அன்பர் அந்த வைபவமெல்லாம் மிகச் சிறப்பாக நடந்ததாயும் சிங்கள மக்கள் அதிகமாக வந்திருந்து பக்தியுடன் வழிபட்டதாகவும் சொன்னார்.

அங்கு செல்ல வேண்டுமென்றுதான் இருந்தேன். வேறு காரணங்களால் செல்ல முடியவில்லை. ஆனால் கொழும்பு வானொலி பிக்செய்த அஞ்சலைக்கேட்டு ஓரளவு திருப்தி அடைந்தேன்' கும்பாபிஷேகத்துக்கு இரு நாட்களுக்கு முன் இரவு எல்லா மூர்த்திகளுக்கும் பக்தர்கள் எண்ணெய்க் காப்பு செய்தார்கள். சிங்கள பக்தர்கள் இதில் அதிகமாகக் கலந்துகொண்டனரென்றும், மூலமூர்த்தியைத் தொட்டு எண்ணெய்க் காப்பு செய்த ஒரு சிங்கள மூதாட்டியார் தான் இந்த ஜன்மம் எடுத்த பயன் கிடைத்ததென்றும் மூலமூர்த்தியைத் தொட்டு எண்ணெய் பூசியது தனக்குப் பேரின்பமளித்ததாகவும் அந்த அன்பரிடம் பக்தி பரவசத்துடன் கூறினராம். தினசரியும் விசேஷ நாட்களிலும் சிங்கள மக்களில் பலர் வந்து வழிபடுவதாகவும் தெரிவித்தார். அந்த அன்பர்.

இந்த நாட்டிலே சமூகஒற்றுமைஏற்படவேண்டுமாயின் அது அரசியல்வாதிகளால் ஏற்பட முடியாது. உள்ள ஒற்றுமையையும் அவர்கள் கெடுத்து புதுப்புதுப் பிரச்சினைகளை கிளப்பிவிடக்கூடும் ஆனால் தெய்வங்கள் மூலம் இந்த ஒற்றுமை பலப்படுத்துவதைப் பார்க்கிறோம்.

போராதனை குறிஞ்சிக்குமரன் கோயில் உற்சவம் நடக்கையில் ஒரு நாள் அங்கு சென்றிருந்தேன். பல்கலைக்கழகத்தில் படிக்கும் சிங்கள மாணவிகளில் சிலரும் வந்து பக்தியுடன் வழிபட்டதைக் கண்டேன் மாணவ மாணவிகள் சேர்ந்து சிரமதானம் செய்து, எவ்வளவு கஷ்டப்பட்டுக் கட்டிய கோவில்! அதைப் பார்க்கப் பார்க்க, நமது பல்கலைக்கழக மாணவர்களைப் பற்றி மிகப் பெருமையாகவுள்ளது

இவ்வளவு சிரமப்பட்டுக் கட்டிய கோவில், நமது சமூகச் சிக்கல்களையும், நாட்டுப் பிரச்சினைகளையும் தீர்க்கப் பெரிதும் உதவவேண்டும். கந்தபுராணத்தை சிங்களத்தில் மொழி பெயர்த்துக் கொடுப்பதுடன், அர்ச்சனை மந்திரங்களையும் சிங்களத்தில் சிறு சிறு நூல்களாக அச்சிட்டு விநியோகிப்பது நல்ல பயனளிக்கும் நம்மிடையே ஏற்படும் சிறுசிறு வேற்றுமைகளையும் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள கோவில்களையே நாம் பயன்படுத்தவேண்டும். மனிதரிடையே கருத்து வேற்றுமைகள் எல்லா விஷயங்களிலும் ஏற்படுவது சகஜம். அவ்வேற்றுமைகளை தெய்வத்தின் தீர்ப்புக்கு விட்டு. பூப் போட்டுப் பார்த்து அதன்படியே நடப்பதென்று எல்லாரும் தீர்மானித்து நடப்பதாயின், நம் சமூகப் பூசல்கள் சுமுகமாகத் தீருவதுடன் நம்மிடையே ஒற்றுமையும் பக்தியும் வளருமல்லவா?

நமது அகங்காரத்தை ஆணவத்தைக் குறைத்துக் கொள்வதற்கே கோயில்களும் வழிபாடுகளும். ஆனால் கோவில் மூலம் நமது அகங்கார, மமகாரங்களை மேலும் அதிகரித்துக்கொள்வதாயின் அது எவ்வளவு விபரீதம்! தெய்வம்தான் அருள் செய்து நம்மைக்காக்கவேண்டும். வேற்றுமை சிறிதாயினும் சரி பெரிதாயினும்சரி, நமக்குள் சண்டையிட்டுக் கொள்ளாமல், தெய்வம் காட்டும் வழியில் நடப்பதென்று நம்பிக்கையுடன் தீர்மானித்து அப்படியே செய்வதாயின் சமூகமும் நாடும் எவ்வளவு சிறப்பாக இருக்கும்! அந்தக்காலம் எப்போது? பிறரைப் பற்றிக் குறைகூறுமல் நம்மைப் பொறுத்தவரை இந்த வழியைக் கடைப் பிடித்தால், நமது சிக்கல்கள் பெரிதும் தீருவதுடன், நமது பழுவும் குறைவதை அனுபவமூலம் காண்கிறேன்.

0 0 0

பள்ளிக்கூடத்தில் ஆறும் வகுப்பு மட்டுமே படித்துவிட்டு, பெரிய மெக்கானிக்கல் இஞ்சினியரும் வியக்கக் கூடிய வகையில் யாழ்ப்பாணத்தில் ஓர் அன்பர் புதியதோர் மெஷினைச்செய்துள்ளதைக்காணப் பெருமையும் மகிழ்ச்சியுமளிக்கின்றது. 'மில்க்வையிற் சோப்' தொழிற்சாலையில் சமீபகாலம்வரை சோப்கட்டிகளை கையால்தான் துண்டு துண்டாக வெட்டிவந்தனராம். ஆனால் இப்போது தானாக இயங்கும் ஒரு மெஷினே இந்த வேலையை மிக விரைவில் கச்சிதமாகச் செய்வதைக் கண்டேன். மெஷினைக் கண்டதும் அது வெளிநாட்டிலிருந்து இறக்குமதியானதோ என்று தோன்றியது. ஆனால் ஆறுவது வகுப்புவரையிலேயே படித்த திரு நாராயணசிவம் என்ற ஒரு தொழிலாளியே கண்டுபிடித்துச் செய்ததாம் படிப்பே இல்லாமல் இதை எப்படிச் செய்யமுடிந்தது என்று கேட்டதற்குத் தாம் விசுவகர்மகுலத்தைச் சேர்ந்தவரென்றும் குலவித்தை கல்லாமலே விக்னேஸ்வரை தியானம் செய்து வழிபட்டால் அவர், தடைகளை நீக்கி நல்ல வழி காட்டுவதாகவும் மிக அடக்கத்துடன் தெரிவித்தார்.

ஐயனார் கோயிலடியில் மகேசா மோட்டார்ஸ் தாபன உரிமையாளரான நாராயண சிவத்துக்கு, கோப்பாய் எம் பி.யான சிவபக்த சிகாமணி கதிரவேலுப்பிள்ளையின் முன்னிலையில் பொன்னாடை போர்த்திக் கௌரவித்து வாழ்த்துப்பாவும் வழங்கப்பட்டது. வெளிநாடுகளிலிருந்து இந்த மெஷினை இறக்குமதிசெய்திருப்பின் ஐம்பதாயிரத்துக்கு மேல் ஆகியிருக்கும் அதில் காற்பங்கு செலவில் இந்த மெஷினை சரிக்கட்டிக்கொடுத்தமை போற்றத்தக்கது. இவ்வித திறமைசாலிகளை அரசாங்கம் உற்சாகமூட்டி ஆதரிப்பது பலவிதங்களில் வரவேற்கத்தக்கதாகும்.

இதுமட்டுமல்ல பனைமரத்திலிருந்து தும்பு எடுத்து 'பிரஷ்' செய்யும் ஒரு மெஷினையும் அவர் தயாரித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் பனைத் தொழில் விசாரணைச் சபையினர், முன்னாள் நீதியரசர் திரு. எஸ். சுப்பிரமணியத்தாரின் தலைமையில் அந்த சோப்புத் தொழிற்சாலைக்கு வந்து, அந்த மெஷினைக் கண்டு பாராட்டுத் தெரிவித்துள்ளனர். பனை மரத்துடனே பல்லாண்டுகள் ஒட்டிக் கொண்டிருக்கும் சங்குமட்டையிலிருந்து தும்பெடுத்து 'பிரஷ்' முதலியவற்றைச்

(8-ம் பக்கம் பார்க்க)

சர்

...ட்டுப்பாடு ...நீங்கும்

...கோட்டை, புதன் ...

...கசுர ...ரிக்கை

...த்திக்கு ...தானம்

...கோட்டை, புதன் ...

...லாசார ...ரப்படம்

திரைப்படக் கண்காட்சி ஒன்று காண்பிக்கப்படவிருக்கிறது.

# 'சாத்வீகப் போராட்டத்தை ஆரம்பிப்பதே சிறந்த வழி'

## தமிழ் புறக்கணிப்பு கண் காட்சி விழாவில் பண்டிதர் இரத்தினம்

அல்லைப்பிட்டி.வேலணை, புதன்

"இன்று தமிழ் மொழியை அரச பலவழிகளிலும் புறக் கணிக்கிறது தமிழ்மக்களுக்கு செய்யும் அநீதிகளை எடுத்துக் காட்டுவதே இந்தக்கண்காட் சியின்நோக்கம் தமிழ்மொழி தேய்ந்துகொண்டே போகின் றது. இதில் நின்றும் நாம் விடுபடுவதற்கு ஒரு சாத்வீக போராட்டத்தை ஆரம்பிப் பதே சிறந்ததாகும்"

மேற்கண்டவாறு வேலணை கிராமசபை மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்ப்புறக் கணிப்புக் கண்காட்சியின் போது ஊர்காவற்றுறை ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத் தினம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் 1947ம் ஆண்டு தொடக்கம் இருந்த தமிழ் மொழியின் சலுகைகள் எல்லாம் இன் றைய அரசாங்கத்தால் புறக் கணிக்கப்பட்டுள்ளது. இத னால் தமிழ் மக்களுக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள் ளது. என்றார்.

கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு கதிரவே லுப்பிள்ளை பேசுகையில் தமிழ் மொழி விசேட விதி கள் சட்டத்தை ஆட்சிமன் றத்தில் சட்டமாக்கியபோது எதிர்த்துமாண்ட இரத்தின சாரா என்ற பிக்குவுக்கு நினை வுச்சின்னம் எழுப்பிய முக் கூட்டு முன்னணியினர் எப் படி தமிழ்மக்களுக்கு உரி மைகள் தருவார்கள்? என்று கேட்டார்.

இக்காட்சிக்கு வேலணை கிராம சபைத்தலைவர் திரு சதாசிவம் தலைமைதாங்கி னார். வேலணையில் இரு தினங்கள் நடைபெற்ற தமிழ் புறக்கணிப்பு கண் காட்சியை கோப்பாய் எம் பி திரு சி கதிரவேலுப் பிள்ளை திறந்துவைத்தார்.

ஊர்காவற்றுறை எம் பி திரு கா பொ இரத்தினம் ஏற்பாடுசெய்த இக்கண் காட்சி இரத்தினசாரோ தேரோவின் தாபி நினைவுச் சின்ன புகைப்படமும், வீதி களில் தனிச்சிங்களத்திலான வழிகாட்டிமுதலானவற்றின் புகைப்படங்களும் இடம் பெற்றன. தனிச்சிங்கள கடி தம், தனிச்சிங்களத்தில் விலாசமிடப்பட்ட தபா லுறை, முதலியனவும் தனிச் சிங்களத்திலான படிவம், தமிழ் புறக்கணிக்கப்பட்டு சிங்களத்திலும் ஆங்கிலத்தி லும் உள்ளபடிவம் தனிச் சிங்கள அழைப்பிதழ் தனிச் சிங்களலேபிள்கள் முதலியன வும், முதலிய 16க்கு மேற் பட்ட பிரிவுகள் இடம்பெற் றன.

## சிவராத்திரி செய்திகள்

யாழ்ப்பாணம், வியா:

தெல்லிப்பளை கிழக்கு கவாளவத்தை ஞானவைர வர் சுவாமி கோவிலில் இம் மாதம் 23-ம் திகதி சிவ ராத்திரி விழா கொண்டா டப்படவிருக்கிறது. அன்று பிற்பகல் 4 மணிதொடக் கம் அடுத்தநாள் காலை 6 மணிவரை விசேஷ அபி ஷேக ஆராதனைகளும் இன் னிசை விருந்துகளும் கூட் டுப்பிரார்த்தனைகள், கதா காலட்சேபங்கள் தவில் கச் சேரிகளும் இடம்பெறும்.

0 0 0

சுண்டிக்குழி கலட்டிப் புலம் ஞான வைரவசுவாமி கோவிலில் சிவராத்திரித் தினத்தன்று மாலை தொடக் கம் விடியும்வரை விசேஷ பூசை அபிஷேகங்களும் மண் சுமந்த தீவண்ணன் பற்றி திரு. இ. கருணாகரனின் கதாப்பிரசங்கமும் நிகழும்

0 0 0

நந்தாவில் மனோன்மணி இந்துசமய அபிவிருத்திச் சங்கம் மகாசிவராத்திரி தினத்தை விமரிசையாகக் கொண்டாடவிருக்கிறது அன்றைய இரவு அம்பா ளுக்கு நான்கு சாமங்களி லும் விசேட பூசையும் அபி ஷேகமும் நிகழும். திருப் பூங்குடி வி. கே. ஆறுமுக த்தின் வில்லுப்பாட்டும் பண்டிதை செல்வி தங் கம்மா அப்பாக்குட்டியின் சொற்பொழிவும் மற்றும் சங்கீதக்கச்சேரி திருமுறை ஓதுதலும் இடம்பெறும்.

0 0 0

அம்பன், வியா.

சிவராத்திரியை முன்னி ட்டு அம்பன் அண்ணா கலா மன்றம், 'மதுவின்முன் மனி தன்' சத்தியவான் சாவித் திரி ஆகிய இரு நாடகங் களை மேடையேற்றவிருக் கின்றன.

0 0 0

கோப்பாய். புதன்

கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவிலில் நடை பெறவுள்ள மகாசிவராத் திரி விழாவில் கோப்பாய் திருவருள் தவநெறி மன்ற ஆதரவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி இசைத்தமிழாசிரியர் கதா காலட்சேப மணி திரு தா. பொன்னம்பலத்தின் சமய சேவைகளைப் பாராட்டி அவருக்குப் பொன்னாடை போர்த்தி பட்டமளிக்கப் படும்.

0 0 0

கதிர்காமத்தில்

கதிர்காமத்தில் தெய் வானை அம்மன் கோவிலில் மகாசிவராத்திரி விழாவுக் கான ஏற்பாடுகள் நடை பெற்றுவருகின்றன. இவ் வாண்டு சிவராத்திரி விழா வுக்கு அநேக அடியார்கள் வந்துகூடுவார்களென எதிர் பார்க்கப்படுகிறது. இவ்விழா வில் வழமையான நிகழ்ச்சி களோடு அநேக கலைநிகழ்ச்சி களும் இடம்பெறவிருக் கின்றன. குறிப்பாக நாரா தானின் கோஷ்டி பஜனையும் அக்கோஷ்டியினரைக் கொண்டு தயாரிக்கப்பட்ட வள்ளி திருமணம் என்றும் நாடகமும் 23, 24 .ம் திகதி களில் மட்டக்களப்பைச் சேர்ந்த மாஸ்டர் சிவலிங் கத்தின் 'சூரபன்மன் வதம்' வள்ளி திருமணம்' முதலிய வில்லுப்பாட்டுகளும் இடம் பெறவிருக்கின்றன.

# ஸ்ரீலங்கா குடியரசில் தொழிலாளரின் நிலை

## ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கம் யோசனை

கோட்டை, புதன்

தம்மை இலங்கைப் பிர ஜைகளாக அங்கீகரிக்குமாறு கோரி விண்ணப்பித்துள்ள அனைவருக்கும் இலங்கைப் பிரஜா உரிமை வழங்கப்பட வேண்டுமென ஐக்கியதோட் டத் தொழிலாளர் சங்கம் யோசனை தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா குடியரசில் தொழிலாளவர்க்கத் திற்கு சிறப்பிடம் வழங்கு வதற்கான உத்தரவாதம் அளிக்கப்படவேண்டுமென வும் சங்கம் கேட்டிருக்கி றது. அரசியல் திட்டம் சம் பந்தமாக ஐ தோ. தொழி லாளர் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் திரு எஸ். நடேசன் அரசியல் நிர்ணய சபைக்கு அனுப்பிவைத் துள்ள மகஜரில் மேற்கண்ட யோசனைகளைத் தெரிவித் துள்ளார் இலங்கை ஒற்றை ஆட்சி அமைப்பாக இருக்க வேண்டுமென மகஜரில கூறப்பட்டுள்ளது. மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள மற் றும் கருத்துக்கள் வருமாறு:

"ஐக்கிய நாடுகள் சபை யின் மனித உரிமைகள் சாசனத்தின் அடிப்படை யில் ஒவ்வொருவரின் பிரஜா உரிமைக்கும் உத்தரவாதம் அளிக்கப்படுவதோடு வம்சா வளிப்பிரஜைக்கும் பதிவுப் பிரஜைக்குமிடையிலுள்ள வேற்றுமைகள் ஒழிக்கப்பட வேண்டும்.

"தேசிய சபையில் தோட் டத்தொழிலாளரின் பிரதி நிதிகளுக்காக 14 ஸ்தா னங்கள் ஒதுக்குவதோடு தோட்டப்பகுதிகளில் ஏனைய இடங்களிலுள்ள உள்ளூ ராட்சி மன்றங்களுக்கு ஒப்பான தோட்டசபைகளை அமைத்து இச்சபைகளுக் கான தேர்தல்களில் பிரஜா உரிமைபெற்ற தொழிலா ளர் அனைவரும் பங்குபற்று வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

"தமிழ்பேசும் தொழிலா ளர்கள் தங்கள் தாய்மொழி யிலேயே அரசாங்கத்துடன் தொடர்புகொள்ள, கல்வி பெற பரீட்சைகளுக் குத்தோற்ற உரிமை அளிப்பதோடு அவர் கள் தொழில்செய்ய முடி யாத காலத்தில் பென்சன் போன்ற வசதிகள் பெற ஏற் பாடுசெய்யவேண்டும்.

இன்னும் பேச்சுரிமை, பத் திரிகைச் சுதந்திரம் கூட்டம் கூட்டுவதற்கும் ஆர்ப் பாட்ட ஊர்வலங்கள் நடத் துவதற்குமான சுதந்திரங்க ளும் வழங்கவேண்டும்.

வெளிநாட்டாருக்குச் சொந்தமான வங்கிகள், ஏஜன்ஸிகள், இலங்கையருக் குச் சொந்தமான வர்த்தக நிறுவனங்கள் தனியார் மருத்துவ நிலையங்கள் பாட சாலைகள் அனைத்தும் தேசிய மயமாக்கப்படவேண்டும்.

"இதுவரையில் தோட் டத்தொழிலாளர் விஷயத் தில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் மனிதாபிமான மற்ற ஜனநாயக விரோதமான கொள்கைகளெல்லாம் நீக் கப்பட்டு புதிய அர சியல் சாசனத்தில் அவர்கள் சகல வசதிகளும் பெறுவதற் கான வழிவகைகள் சேர்க் கப்படவேண்டும்.

## பதவி உயர்வு பற்றி புகார்

கோட்டை, வியா

தபால் தந்தித் தொடர்பு தொழில் நுட்பவியலாளர் புதிய பதவி உயர்வுகள் பார பட்சமாகக் கொடுக்கப் பட்டுள்ளதாக புகார் செய் துள்ளார்கள் தபால் தந்தித் தொடர்பு அமைச்சர் செல் லையா குமார சூரியரைச் சந் தித்து தொழில் நுட்பவிய லாளர்கள் இதுபற்றி விளக் கியுள்ளார்கள்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வியாழன் 18—2—7

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந் தனை, 6-35 நதிப்பாடல் கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசை வேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்விஒலி பரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 நாட்டுப்பாடல்கள், 7-00 இசை நிகழ்ச்சி, 7-15 பாட்டு, 7-45 செய்திச்சுருள், 8 00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 விளையாட்டு, 9-40 நாதஸ்வரம், 10 30 செய்தித் தொகுப்பு.

வலி-மேற்கில்

## ஏழு அபிவிருத்திச் சபைகள்

சுழிபுரம், புதன்

வலிகாமம் மேற்குப் பகு திக்கு ஏழு அபிவிருத்திச் சபைகளை ஏற்படுத்துவதென அரசாங்க அதிபர் தலைமை யில் சித்தங்கேணி கணேச வித்தியாசாலையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சுழிபுரம் கிராமசபைப்பகுதி வட்டுக்கோட்டை கிராம சபைப் பகுதி, அராலி கிராம சபைப் பகுதி. சங்கானைப் பட்டின சபைப் பகுதி, மானிப்பாய் பட்டினசபைப் பகுதி மானிப்பாய் கிராம சபைப் பகுதி பண்டத்த ரிப்புப் பட்டினசபை கிராம சபைப் பகுதி ஆகியவையே குறித்த ஏழு பிரிவுகளாகும்

உரிமைகளைப் பெற

## 'பௌத்தம் அரசமதமாக வேண்டும்'

கோட்டை, புதன்

பௌத்தமதத்தை இலங் கையின் அரசமதமாக்கினால் இங்குள்ள பௌத்த மக்கள் தாங்கள் இழந்த உரிமை களையும், நலன்களையும் திரும்பப்பெற்று விடுவார் கள் என வண பதகேகம விமலவன்ச நாயக்க தேரர் குறிப்பிட்டுள்ளார்.

சலகாமத்தில் உள்ள பிரி வேனா நிலையமொன்றின் பரிசளிப்புவிழாவில் உரை யாற்றுகையிலேயே மேற் கண்டவாறு கூறினார்.



## கையிருப்பில் கிடைக்கும்

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

WALKER-WOLSELEY

நீர்ப்பாசன பம்புகள்

★ மணிக்கு 10,000 கலன்
★ குறைந்த இயக்கச் செலவு
★ பராமரிப்புச் சுலபம்



2" பெற்ரோல் / மண்ணெண்ணெய் பம்ப்

நீர்ப்பாசன, மற்றும் பொதுவான இறைப்பு வேலைகளுக்கான பிரசித்திபெற்ற நம்பகமான வாக்கர் வூல்ஸ்லி பெற்ரோல்/ மண்ணெண்ணெய் யந்திரங்கள் இப்பொழுது வாக்கர் இன்டஸ்ரீஸ் (சிலோன்) லிமிட்டெட்டால் இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன.

WI வாக்கர் இன்டஸ்ட்ரீஸ் தயாரிப்பு

பக்கபலமான பராமரிப்பு ஊழியர்களுடன் சகலவித உதிரிப்பாகங்களும்.

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

இல: 37 39, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்

தொடர்பு கொள்க:

திரு. ஏ. சி. ஜோசெப் (மனேஜர்)

தொலைபேசி- 7031

# ஒய்வுபெற்ற 4 ஆசிரியர்க்கு நடந்த பாராட்டு விழா

யாழ்ப்பாணம், வியாழன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலிருந்து இளைப்பாறிய ஆசிரியர்கள் நால்வருக்கு கல்லூரியினர் நலம் பாராட்டியும் அன்பளிப்புச் செய்தும் கௌரவித்தனர். ஆசிரிய மன்றத்தினர் பகல் விருந்தளித்தும் பொற்கிழி வழங்கியும் உபசரித்தனர்.

திருவாளர்கள் மா. கதிரிப்பிள்ளை செ சுகிர்தரத்தினம், ம. கந்தசுவாமி, க. சிவசம்புப் பண்டிதர் ஆகியோருக்கே இப்பிரிவுபசார விழா நடாத்தப் பட்டது. ஒய்வுபெற்றவர்களில் திரு. மா. கதிரப்பிள்ளை பயிற்றப் பட்ட தமிழாசிரியராய்த் தம் சேவையைத் தொடங்கி லண்டன் பல்கலைக் கழக கலைமாணிப்பட்டம் பெற்று வடமொழி தென்மொழிகளிலும் கணிதத்தின் பல்வேறு துறைகளிலும் கைதேர்ந்த ஆசிரியராய் விளங்கியவர். 38 ஆண்டுகள் ஆசிரியராய் பணியாற்றியவர்.

ஆசிரியர் திரு. செ. சுகிர்தரத்னம் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராய் இக்கல்லூரியிலேயே 21 ஆண்டுகள் சேவை புரிந்து இளைப்பாறுகின்றார். ஆங்கிலப் பேச்சுப் போட்டி நாடகம் போன்ற துறைகளில் வல்லவராய் மாணவர்களுக்கு முன் மாதிரியாய் விளங்கியவர்.

திரு. ம. கந்தசுவாமி பாடசாலையின் மத்திய பிரிவு வகுப்புகளிற் சிறந்த ஆங்கில ஆசிரியனாய் 18 ஆண்டுகள் இக்கல்லூரியில் கடமையாற்றியவர், ஆசிரிய மன்றச் செயலாளராயும் பொருளாளராயும் பலமுறை பணியாற்றியவர். தம் கடமைகளை ஒழுங்காகவும் அழகாகவும் எப்போதும் செய்து வந்தவர்.

பண்டிதர் க. சிவசம்பு இக்கல்லூரியில் எட்டாண்டுகள் சேவைபுரிந்தார், கல்வித் துறையல் 38 ஆண்டுகள் முழுச் சேவையாற்றினார். தமிழிலக்கிய இலக்கணங்களை வரன்முறையாகக் கற்ற இப்பெரியார் உயர்தர வகுப்புகளிற் தமிழும் சைவசித்தாந்தமும் போதித்தவர்.

இந்நான்கு ஆசிரியர்களுக்கும் கல்லூரியினர் எடுத்த விழாவுக்கு அதிபர் திரு பி. ஏகாம்பரம் தலைமை தாங்கினார். உப அதிபர் திரு. க. சிவகுமார் நால்வரையும் பற்றித் தனித்தனி விதந்துரைத்தார். கல்லூரி மாணவிகள் பாராட்டுப் பத்திரங்கள் வாசித்தளித்தனர். மாணவர்கள் நன்றி நவின்று அன்பளிப்புகளை வழங்கினர்.

ஆசிரியர்கள் சார்பாக திருவாளர்கள் மயிலுப்பிள்ளை துரைராசா, ஞானச்சந்திரமூர்த்தி, வித்துவான் ஆறுமுகம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். இளைப்பாறிய ஆசிரியர்கள் பாராட்டுக்கு நன்றி கூறினர்கள்

—

## கரபந்தாட்ட சுற்றுப் போட்டி

சுழிபுரம், புதன்

வலிகாமம் மேற்கு பிரிவு இரண்டாவது விளையாட்டுக் கழகங்களுக் கிடையேயான கரபந்தாட்ட சுற்றுப் போட்டியொன்று நடைபெறுவதற்கான ஆயத்தங்களை இப்பகுதி விளையாட்டுப் போதனாசிரியர் கவனித்து வருகின்றார் போட்டியில் பங்குகொள்ளும் சகல கழகங்களினதும் சுற்றுப் போட்டி வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'வாழ்க்கை ஒரு வசந்தம்' வெளியீடு

யாழ்ப்பாணம், வியாழன்

கவிஞர் இ. நாகராஜன் எழுதிய 'வாழ்க்கை ஒரு வசந்தம்' என்னும் நாவல் அறிமுக விழா நாளை மாலை நடைபெறும்.

யாழ்ப்பாணம் மலேயன் கபே மேல்மாடியில் நடைபெறும் இவ்விழாவுக்கு கவிஞர் கந்தவனம் தலைமை தாங்குவார் வித்துவான் க. கணபதிப்பிள்ளை, கவிஞர் காரை. செ சுந்தரம்பிள்ளை ஆகியோர் உரைநிகழ்த்துவர் கலைஞர் வேல்ஆனந்தன், திரு ஆர். செல்லையா இருவரும் முதற்பிரதிகள் பெறுவார்கள் கவிஞர் வே. ஐயாத்துரையின் தமிழ் வாழ்த்துடன் விழா ஆரம்பமாகும்.

## 5,800 லைசென்ஸ்

கோட்டை, புதன்

கடந்த மாதம், துப்பாக்கிகள் வைத்திருக்கும் சுமார் 20000 பேர்களில் 5,800 பேருக்கு அரசாங்கத்தினால் பெர்மிட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. இத்துப்பாக்கிகளில் பெரும்பாலானவை ஒற்றைக் குழல் துப்பாக்கிகளாகும். மிகுதி இரட்டைக் குழல் துப்பாக்கி, சுழல் துப்பாக்கி, பிஸ்டல்கள் ஆகியவையாகும்.

## ரூபா 300 கோடி செலவில் 50 தொழிற்சாலைகள்

கோட்டை, புதன்

கைத்தொழில், விஞ்ஞான அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா தயாரித்துள்ள ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 50 தொழிற்சாலைகள் நிறுவப்படவிருக்கின்றன. இதற்கு 300 கோடி ரூபா செலவிடப்படும். இதில் 200 கோடி ரூபா உதவிப் பணமாக வெளிநாடுகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும். சோவியத்ரஷ்யா, போலந்து வட கொரியா கிழக்கு ஜெர்மனி, சீனா ஆகிய நாடுகள் இவ்வுதவிப் பணத்தை வழங்க முன்வந்துள்ளன.

## காடையர் தொல்லை

வல்வெட்டித்துறை, புதன்

தொண்டமனாறு செல்வச்சந்நிதி கோவிலில் தினமும் காடையர்கள், குடிகாரர்கள் தொல்லைகள் வரவர அதிகரித்துக்கொண்டு வருகிறதாம்

கோவிலடியில் கூன், குருடு, சப்பாணி, வயோதிபர் ஆகியோருக்கு ஸ்ரீ முருகன் அன்னதான சபையினரால் வழங்கப்படவிருந்த அன்னதானத்திலும் இரு குடிகாரக் காடையர்கள் புகுந்து குழப்பம் விளைவித்ததன் காரணமாக அன்று நூற்றுக்கு மேற்பட்டோர் அன்னதானம் சாப்பிடமுடியமல் பட்டினியாக இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதாகத் தெரியவருகிறது. இக்கோவிலடியில் காடையர்கள் தொல்லை பல காலமாக இருந்துவருகிறது.

## இளைஞர்கள் தெரிவு

அம்பன் புதன்

இவ்வாண்டு நடைபெறவிருக்கும் இளம் விவசாயிகள் கழக வானொலி அறிவுப் போட்டிக்கு அம்பன் இளம் விவசாயிகள் கழகத்திலிருந்து திருவாளர்கள் ந அரசரத்தினம், வே. தம்பையா, செல்விகள் சி கமலாதேவி, ந இலட்சுமியம்மா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## இன்றைய பலன்

மாசி மாதம் 6-ந் திகதி (18-2-71)

மேஷம்- எண்ணம் போல் வாழ்வு இன்று மலரும். சிலருக்கு திடீர் திரவிய லாபமும் கிடைக்கும். கலகலப்பான தினம்.

ரிஷபம்- அவசரக்கோலம் தலைகாட்டும். அதன் வழித் துன்பங்கள் தொடரும். ஆசாரக் குறைவுமுண்டு. அடக்கமே நன்று.

மிதுனம்- அலைமோதும் மனத்துடன் அமைதியும் குன்றும். வலைவீசும் எதிரிகளும் காத்திருப்பர் இன்று

கடகம்- கன்னற்போல் கருத்தினிக்காதல் மோதும் மின்னல்போல் மறையும் பிணி இன்றே வாட்டிடும் தானே.

சிம்மம்- புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும் புதிய அனுபவங்கள் கிடைக்கும். குறிக்கோளில் வெற்றியுண்டு. ஆனந்தநிலை.

கன்னி- இல்லத்தில் இனிமை மலரும். உறவினர்கள் கூடுவர். உல்லாசமான பொழுதுபோக்கும் உண்டு.

துலாம்- முன்னேற்றத்தில் தடை ஏற்படும், ஆதரவு தருபவர்களைப் பகைத்துக் கொள்ளவேண்டாம்.

விருச்சிகம்- தெளிந்த மனம் தெய்வ குருபக்தியுடன் தேடியதும் கிடைக்கும். பரோபகாரச் சிந்தை மேலிடும்.

தனுசு- தொழில் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றத்துக்கு வழிகோலப்படலாம் இதன் மூலம் பதவியில் உயர்வும் கிடைக்கலாம்.

மகரம்- பலகாலம் எதிர்பார்த்திருந்த பதவிஉயர்வுக்கு வழிகோலப்படலாம். சிலருக்குபுதிதாகத் தொழில் கிடைக்கக்கூடும்.

கும்பம்- குறுக்குவழியில் இறங்குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக்கொள்ளக் கூடும் திரைமறைவில் உங்கள் நடவடிக்கை கண்காணிக்கப்படும்.

மீனம்- ஆத்திரப்படுவதால் அனர்த்தங்கள் விளையக் கூடும். எதிலும் பொறுமையுடன் இருப்பது விரும்பத்தக்கது.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## தினம் 20 ஆயிரம் றாத்தல் இறால்

யாழ்ப்பாணம், புதன்

மீன்பிடி தொழில் நவீனமயமாக்கப்பட்ட தன் பின்னர் தாளையடி பருத்தித்துறை, சுண்டிக்குளம் ஆகிய இடங்களில் மீன்பிடிக் கூட்டுத்தாபனம் தினத்தால் 20 ஆயிரம் றாத்தல் றால்பிடிக்கப்படுகின்றதாம்.

சமீப காலம்வரை இப்பிராந்தியத்தில் தொழிலாளர் சுயமாக றால் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தனராயினும் இவ்வளவு தொகையான றால்பிடிக்கப்பட்டிருந்ததில்லையென்றும் மீன்பிடி கூட்டுத்தாபனத்தின் நவீனமயமான தொழிலே இதற்குக் காரணம் என்றும் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த திரு. பெர்னாண்டோ கூறினார்.

"மேற்படி பகுதியில் தொழிலாளர்கள் றால் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள் இவர்கள் பிடிக்கும் றாலின் பெரும்பகுதி செலாவணி ஆதாயமையினால் போதிய இலாபத்தை இவர்கள் பெறமுடியவில்லை கூட்டுத்தாபனத்தின் பொறுப்புக்குள்ளானபின் பிடிபடும் றால் அனைத்தும் வான்மூலம் கொண்டுவரப்படுபின் ஐஸ் இடப்பட்டு வெளியூர்களுக்கு உடனுக்குடன் அனுப்பப்படுகிறது" என்று மேலும் தெரிவித்தார் (கு.வி.ம)

# இலங்கைக்குசீன அரசியல்திட்டம்?

### சேர் ஆர்தர் ரணசிங்க வெளியிடும் கருத்து

கோட்டை, புதன்

சீன அரசியல்திட்டத்தின் அடிப்படையில் இலங்கையின் புதிய அரசியல் திட்டமும் உருவாக்கப்படுவதாக முன்பு ரோமில் இலங்கை தூதுவராக இருந்துள்ள சேர் ஆர்தர் ரணசிங்க அரசியல் திட்ட அலுவல்கள் அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். அரசாங்க வங்கியில் அதிபராகவும் இவர் முன்பு கடமையாற்றியிருக்கிறார்.

தனிப்பட்டவர்களின் பொறுப்புக்களையும் முயற்சிகளையும் தடுக்கக்கூடியதான சகல அரசியல், சமூக, கலாச்சார, பொருளாதார விஷயங்களையும் தானே மேற்கொள்வதான ஓர் அரசாங்கத்தை உருவாக்கவே தாங்கள் முயல்வதாக எனக்குத் தெரிகின்றது என சேர் ஆர்தர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக ஆட்சிமுறையில சோஷலிஸத்தை உருவாக்குவதே திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி, பண்டாரநாயகாவின் கொள்கையாக இருந்துவந்துள்ளது' இந்தக் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிப்போம் என்று அவரது துணைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவும் தெரிவித்து வந்துள்ளார் என்றும் சேர் ஆர்தர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(றிவி ரெஸ பத்திரிகையில் நேற்று முக்கிய செய்தியாக இது முன்பக்கம் பிரசுரிக்கப்பட்டிருந்தது)

## வேலைகள் விஸ்தரிக்கப்படும்

கோட்டை, புதன்

சிறிலங்கா வர்த்தக கூட்டுஸ்தாபனம் ஏற்றுமதிவர்த்தகத்தை முன்னர் தீர்மானித்துள்ளதிலும் பார்க்கக்கூடிய அளவு விஸ்தரிக்கவுள்ளது.

மற்ற நாடுகளோடு பரஸ்பர ஒப்பந்தங்கள் செய்து கொள்ளுதல் அரசாங்க கொந்தராத்துகள் ஆகியன மூலம் மேற்படி விஸ்தரிப்பு அலுவல்கள் நடைபெறும். இவ்வாறு செய்வதால் முக்கிய உற்பத்திப்பொருட்களை பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடியதாக விருக்கும்.

சோஷலிஸ நாடுகள் பலவற்றுடன் இலங்கை ஏற்கனவே வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்துள்ளது இந்த ஒப்பந்தங்களைச் செயல்படுத்தக் கூடிய ஏற்றுமதி வேலைகளை மேற்படி கூட்டுஸ்தாபனமே மேற்கொள்ளவிருக்கிறது.

## பெருந்தொகை மிளகாய் செய்கை

அம்பன், புதன்

முத்தையன்கட்டு, விஸ்வமடு திட்டத்தில் மிளகாய்ச் செய்கை பண்படுத்தப்பட்டு வருவதுபோல் இம்முறை உடையார்கட்டுகுடியேற்றத் திட்டத்திலும் மிளகாய்ச் செய்கை பெருந்தொகையாகச் செய்கை பண்ணப் பட்டுள்ளது. முத்தையன் கட்டு விஸ்வமடு உபஉணவு உற்பத்தியில் அபிவிருத்தி அடைந்ததுபோல் இங்கும் அபிவிருத்தி அடையலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## தாக்கினராம்

சுழிபுரம், புதன்

சுன்னாகம் கந்தரோடையிலுள்ள கல்லூரியொன்றில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவர் கல்லூரியிலிருந்து சைக்கிளில் தமது வீடு வந்து கொண்டிருந்தபோது இனந்தெரியாத நபர்களால் சண்டிலிப்பாய் மடத்தடியில் வைத்துத் தாக்கப்பட்டாராம். நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவம் பற்றி சங்கானைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## பல்கலைக்கழகத்துக்கு இந்தியா உதவும்

கோட்டை, புதன்

கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் வான சாஸ்திர இலாகாவொன்றை அமைப்பதற்கு இந்தியாவிலுள்ள முன்னணி வான சாஸ்திர நிபுணர்கள் உதவி செய்யமுன்வந்துள்ளார்கள்.

இலங்கை வானசாஸ்திர சங்கத்தின் உதவி அதிபர் திரு. ஏச். குணவர்த்தனா சமீபத்தில் இந்தியா சென்றிருந்தபொழுது மேற்படி இந்திய விஞ்ஞானிகள் தங்களது உதவிபற்றித் தெரிவித்துள்ளனர் எனத் தெரியவருகிறது. இவர் கோடைக்கானலிலுள்ள வானசாஸ்திர ஆராய்ச்சி பார்வை நிலையங்களைச் சென்றுபார்வையிட்டார்.

## கலாநிலைய பற்றுச்சீட்டுப் புத்தகங்கள்

இரு கலரில் அழகிய முறையில் அச்சடித்த
(50 மூலப் பிரதிகளும், அதன் பிரதிகளும்)
பற்றுச்சீட்டுப் புத்தகங்கள்
எம்மிடம் குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு 25 புத்தகங்களுக்கும்
பற்றுச்சீட்டுப் புத்தகங்களை வைத்து
எழுதுவதற்கு அழகான
மட்டைக்கவர் இலவசமாகக் கொடுக்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு நேரில் எம்மிடம்
தொடர்பு கொள்ளவும்.

'ஈழநாடு'
வர்த்தக அச்சகப்பகுதி
யாழ்ப்பாணம்.

# திருமலைச் சிங்களவரை காப்பாற்ற கோரிக்கை

## பிரதமருக்கு தேரோ கடிதம்

திருகோணமலை, வியா

திருகோணமலைப் பகுதியில் பரம்பரையாக வாழ்ந்துவரும் சிங்கள மக்கள் சிங்களவர்களல்லாதவர்களின் கெடுபிடிகள் காரணமாக கல்வி பொருளாதாரம் ஆகிய விடயங்களில் பெரும் சங்கடங்களுக்காகின்றார்களென்றும் இந்த மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரி கிழக்கிலங்கை தம்பன்கடு பிரதான பௌத்த தலைவரான சேருவில ராஜ மானிகாராபதிதுருமகீர்த்தி ஸ்ரீ தம்பகஸ்றே ஸ்ரீ சுமதுங்கர நாயகதேரோ பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவுக்கு எழுதியுள்ளார்.

இந்தக் கடிதங்கின் பிரதிகளை அமைச்சர்கள் உப அமைச்சர்களுக்கு அனுப்பியிருக்கிறார்.

திருகோணமலையில் பல்வேறு இனத்தினரும் வாழ்கிறார்கள். என்றாலும் இப்பகுதியில் வாழும் 41 ஆயிரம் சிங்களமக்களுக்குப் பெரும் சங்கடங்கள் ஏற்பட்டுவருகின்றன. பொருளாதார ரீதியிலும் அந்தஸ்திலும் சிங்களவர்கள் பின்னுக்குத் தள்ளப் பட்டிருக்கின்றனர். சிங்களவர் அல்லாதவர்கள் தலையை உயர்த்திக்கொண்டு சிங்கள இனத்தை மிதித்துப்போடுவதற்கு முன்வருகின்றார்கள் இதற்குக் காரணம் திறமையும் புத்திசாலித்தனமும் உள்ள தலைவர்கள் இப்பகுதியில் இல்லாததே என்று பிரஸ்தாப தேரோ குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் அக்கடிதத்தில் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப்பகுதியில் வாழும் சிங்களவருக்குச் சரியான கல்விகிடைப்பதில்லை தமிழ் முஸ்லிம் பாடசாலைகளில் இருப்பதுபோல சிங்களப் பாடசாலைகளில் தேவையான வசதிகள் இல்லாமலிருப்பதுடன் சிங்களவர் அல்லாதாரின் சூழ்ச்சிகளும் இதற்குக்காரணமாகும்.

அரசாங்க அதிபரின் காரியாலயம் உட்படச் சகல அரசாங்க காரியாலயங்களிலும் சேவைபுரிந்துவந்த சிங்கள அதிகாரிகள் மாற்றப்பட்டு அந்த இடங்களுக்குச் சிங்களவர் அல்லாதவர்கள் நியமிக்கப்பட்டதன் காரணமாக இங்கு இப்போது சிங்கள அதிகாரிகள் இல்லவேஇல்லை கல்விக் காரியாலயம் திருமலைத் தபால் காரியாலயம். மூதூர் தபால் காரியாலயம் பொலிஸ் நிலையம் மாவட்ட வைத்தியக் காரியாலயம் முதலியன இதில் முதலிடம் வகிக்கின்றன இந்தநிறுவனங்களில் பணிபுரியும் சிங்களவர் அல்லாத அதிகாரிகள் எப்பொழுதுமே சிங்களவர்களுக்கு வேற்றுமை காட்டும் அதேசமயம் தமது இனத்தவர்களுக்குச்சலுகைகள் செய்கிறார்கள்''

(இச்செய்தியைநேற்றைய 'திவிறெஸ' பத்திரிகை கடைசிப்பக்க முக்கிய செய்தியாக வெளியிட்டுள்ளது)

## விசேஷ புகையிரத சேவை

யாழ்ப்பாணம், வியா

23-ந் திகதி யாழ்தேவி, உத்தரதேவியில் பிரயாணம் செய்யும் யாத்திரிகர்களின் வசதிக்காக இம்மாதம் 23-ந் திகதி காலை 10-15 மணிக்கு மதவாச்சியிலிருந்து விசேட புகைவண்டி ஒன்று திருக்கேதீஸ்வரத்துக்கு புறப்படும். இன்னொரு விசேட புகைவண்டி மாலை 6.35க்கு மதவாச்சியிலிருந்து புறப்பட்டு திருக்கேதீஸ்வரத்தையடையும்.

24-ம் திகதி யாத்திரிகர்கள் தம் சொந்த ஊர்களுக்குத் திரும்புவதற்கு வசதியாக தலைமன்னார், அனுரதபுரம் பகல் ரயில் சேவையிலும் சிறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

24-ம் திகதி காலை 10 மணிக்கு புகைவண்டி திருக்கேதீஸ்வரத்தைவிட்டுப் புறப்படும். பகல் 11மணிக்கு விசேட புகைவண்டி ஒன்று திருக்கேதீஸ்வரத்திலிருந்து மதவாச்சியை வந்தடையும். இந்த வண்டி பகல் கொழும்பு - காங்கேசன்துறை சேவையைப் பிடிக்கக் கூடியதாக 12 30 மணிக்கு மதவாச்சியை வந்தடையும் மாலை யாழ்தேவி, உத்தரதேவி சேவையைப் பிடித்துக் கொள்ள வசதியாக இன்னுமொரு விசேட புகைவண்டி பிற்பகல் 3 22 மணிக்கு திருக்கேதீஸ்வரத்திலிருந்து புறப்பட்டு மதவாச்சியை அடையும்' இந்த விசேட சேவைகள்யாவும் வடபகுதி மக்களுக்காக ஏற்பாடு செய்துகொடுக்கப்பட்டுள்ளது.

இ.போ.ச வும்யாத்திரிகர்களின் வசதிகருதி விசேட பஸ்போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்துள்ளது. பஸ் கட்டண சலுகையும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

"நாட்டை முன்னேற்றுவதற்கு

# கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கடும் உழைப்பு தேவை"

— பிரதமர்

கோட்டை, புதன்

தேசிய முன்னேற்றத்தை அடைவதற்கு எட்டு முன் மாதிரிக் குறிப்புக்களை பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பிரஜைகள் கடும் உழைப்பு உடையவர்களாயும், ஆடம்பரங்களை விலக்கி சிக்கனத்துடன் பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்து கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளவேண்டுமெனவும் அம்பாறையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மகாநாட்டில் தலைமை உரை நிகழ்த்துகையில் பிரதமர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை: நாட்டில் பல்வேறு வகையில பீதிகளை மக்களிடத்து உருவாக்கி குழப்பத்தை விளைவிக்க பிற்போக்குவாதிகள் முயற்சி செய்கின்றனர். பண மூலமும், மற்றும் வழிகளிலும் இளைஞர்களை இவர்கள் தவறான வழியில் செலுத்த முயலுகின்றனர். இந்த உண்மையை இளைஞர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். மக்கள் ஆதரவுடனேயே ஐக்கியமுன்னணி அரசாங்கம் அமைந்தது மக்கள் விருப்பத்தைப் பெற்ற இவ்வரசாங்கம் எந்தவிதமான ரகசியத்தையும் மக்களிடமிருந்து மறைக்கமாட்டாது.

காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் கருத்தை நினைவுப்படுத்திக் குறிப்பிட்டவை பிற்போக்குவாதிகளுக்குச் சந்தர்ப்பம் அளித்தால் 25 ஆண்டுகள் சென்றாலும் நாட்டை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டுசெல்ல முடியாது. 1965-ம் ஆண்டு பிற்போக்குவாதிகளுக்குச் சந்தர்ப்பம் அளித்ததனால் நாம் இப்பொழுது பிற்பட்ட நிலைமையில் நிற்கின்றோம். மக்கள் அரசாங்கம் ஆரம்பக் கட்டத்தில் இப்பொழுது நிற்கின்றது நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்குவதற்கு அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது இவ்வருடம் ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு தரத்திலுமுள்ள அரசாங்க அலுவலகங்களில் வேலை செய்யும் ஊழியர்களும் தனியார் நிறுவனங்களில் வேலைசெய்யும் ஊழியர்களும் வயல்களில் வேலை செய்யும் விவசாயிகளும் தொழிலாளிகளும் நாட்டின் முன்னேற்றத்தை மனதிற் கொண்டு கடுமையாக உழைக்க வேண்டும். சகல துறைகளிலுமுள்ளவர்கள் ஒரே நோக்கத்தோடு உழைத்தால் எமது கஷ்டம் தீரும்

நாம் சுயநலத்துடன் செயல்புரிந்தால் அது அழிவுக்கே வழிவகுக்கும் யாராயிருந்தாலும் செய்த வேலைக்குமேல் கூலி கேட்டால் அது வெட்கத்துக்குரியது. அது வெட்கப்பட வேண்டியது வேலைசெய்யும் ஸ்தலங்களில் முதலாளிகளுக்கும் தொழிலாளிக்கும் ஒற்றுமை அவசியம்.

......

## ஐயாறன்

(5 ம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ளதை அவர்கள் பார்வையிட்டனர்.

மலையாளத் வராயினும், தமக்குத் தமிழில்தான் பற்றுதல் அதிகமென்றும். தமிழ் வாசிப்பதுடன் ஆங்கிலத்தில் தம் தொழிலுக்கான 'மெக்கானிக்கல் அறிவு' உண்டென்றும், ஒவ்வொருவரும் தங்கள் குல வித்தையை ஒதுக்கி அலட்சியம் செய்யாமல், அதை மதித்துப்பயின்றால், வேலையில்லாக் கஷ்டத்தைத் தங்களுக்குத் தாங்களே தீர்த்துக்கொள்ளலாமென்றும் பிறரை இருந்து நம்பியிருக்கத் தேவையில்லையென்றும் சொல்கிறார் இந்த மெக்கானிக்கல் இஞ்சினியரான திரு. நடராஜசிவம். அவர் காட்டும் முன்மாதிரி நம்மவர்களுக்குப் பயன்படவேண்டும்.

......

(1-ம் கலத் தொடர்ச்சி)

## எம். பி. கடிதம்

யாழ்ப்பாணம். வியா

அரசாங்கத்தின் முன்னேற்ற நடவடிக்கைகளைக் கெடுக்கும் நோக்கமுடைய ஒரு பகுதியினரால் திட்டமிட்டே இச்சதிச் செயல் நடைபெற்றிருக்கலாம் அதனைக் கண்டுபிடிப்பதற்குரிய சகல நடவடிக்கைகளையும் விரைவாக எடுக்குமாறு மூன்று நாட்களுக்கு முன்பு கிளிநொச்சியிலுள்ள தெற்கு யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச்சங்க சமாசத்தில் நடைபெற்ற களவுபற்றி சம்பந்தப்பட்ட அமைச்சுக்கும் அதிகாரிகளுக்கும் கடிதமொன்றை கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு ஆனந்தசங்கரி அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது! இந்தக் களவைக் கண்டுபிடிப்பதற்குரிய சகல நடவடிக்கைகளையும் எடுப்பதோடு சமாஜத்தை சீல் வைத்து சங்கத்தின் முன்னைய செயன்முறைகளைப்பற்றியும் தஸ்தாவேஜுகளைப் பற்றியும் ஆராய வேண்டும்.

## தனியார் ...

(1 ம் பக்கதொடர்ச்சி)

சைச் சேர்ந்த பிரமுகர் குறிப்பிட்டுள்ளார்.

தனியார்துறைக் கைத்தொழில்களை விருத்தி செய்வதற்காகவும் தனியார் ஸ்தாபனங்களில் தொழில் புரிபவர்களுக்கு ஸ்திரமான வேலைவாய்ப்பை அளிப்பதையுப்நோக்கமாகக் கொண்டே அரசாங்கம் மேற்படி நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

— —

## ஈ. வே. ரா. மீது வழக்கு

சென்னை, பெப். 17

இந்துக் கடவுளரை அவமதித்து ஆபாச சிலை ஊர்வலம் நடத்தியதற்காக திராவிடக் கட்சித் தலைவர் ஈ வே. ராமசாமி பெரியார் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் சென்னையில் நடைபெற்ற பகுத்தறிவு மகாநாட்டையொட்டி இவ்வூர்வலம் நடைபெற்றது.

தமிழ் மாணவர் பிரச்னை திராவிடில்

# கல்வி அமைச்சர் மீது அவ நம்பிக்கைத்தீர்மானம்!

## தமிழரசு செயற்குழு கொண்டுவரும்

— நமது நிருபர் கு. வி. மகாலிங்கம் —

யாழ்ப்பாணம், வியாழன்

தமிழ்ப் பகுதியில் கல்வித்துறையில் கல்விமந்திரி எடுத்துவரும் எதிர் நடவடிக்கைகள் பற்றிப் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வருவதென்றும், அதற்கு நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் ஆட்சிமன்றத்தில் கல்வி மந்திரிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதென்றும் நேற்று நடந்த தமிழரசுக்கட்சிச் செயற்குழுக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

யாழ்ப்பாணத் தமிழரசுக் கட்சிக் காரியாலயத்தில் திரு. எஸ் எம் இராசமாணிக்கம் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

■ வடபகுதியில் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவும் அதே நேரத்தில் கிழக்கு இலங்கையிலும் பூரணத்துவமான பல்கலைக்கழகம் ஒன்று திறுவப்படவேண்டும்.

■ திருக்கோணமலை கோணேஸ்வரர் ஆலயத்தை புதைபொருள் ஆராய்ச்சிக்கு எடுத்திருப்பதை வன்மையாகக் கண்டிப்பதோடு அதனைப் புனித நகராக்கவேண்டுமெனக் கோருவது.

■ வல்வை மாநாட்டுத் தீர்மானங்களை ஏற்றுக் கொண்டு இந்த முடிவுகளை அரசியல் நிர்ணயசபையில் வற்புறுத்துவதென்றும் அதிதுடன் சமஷ்டிக் கொள்கைகளை வற்புறுத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

■ கிளிநொச்சியில், வரும் ஏப்ரல் 30, மே 1, 2ந் தேதிகளில் தமிழரசுக்கட்சியின் மாநில மகாநாட்டை நடத்துவது. கரடிப்போக்குச் சந்தியில் ஏப்ரல் 30ந் தேதி அமரர் வன்னியசிங்கத்திற்குச் சிலை நிறுவுவதென்றும், சரணவாயிலிருந்து ஏப்ரல் 2?ந் தேதி இச் சிலையை ஊர்வலமாக எடுத்துச் செல்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

தமிழரசுத் தலைவர் திரு எஸ். ஜே வி செல்வநாயகம், திருக்கோணமலை எம் பி. திரு. நேமிநாதன், திரு. அ அமிர்தலிங்கம், ஊர்காவற்றுறை எம்.பி. பண்டிதர் கா, பொ. இரத்தினம் ஆகியோருட்படப் பலர் வந்திருந்தனர்.

இப் பத்திரிகை "ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## மரண அறிவித்தல்

### A. V. நடராஜா

நவலக்ஷ்மியின் அன்புக் கணவரும் புஷ்பராணி, சரோஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், தில்லைநாதனின் (மந்திகை அரசினர் வைத்தியசாலை) மாமனாரும். திருமதிகள் கே. சுப்பிரமணியம். கே. இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரரும், திருமதிகள் என் தியாகராஜா. எஸ் கே. நமசிவாயம், திருவாளர்கள் இராஜேந்திரம், தம்பிராஜா, சிவலோகசுந்தரம், பத்மநாதன் ஆகியோரின் மைத்துனருமான திரு. A. V நடராஜா (இளைப்பாறிய யாழ். மாநகரசபை உத்தியோகத்தர்) காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் யாழ்ப்பாணம் 36 ஸ்ரான்லி வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் இருந்து இன்று மாலை 4 மணிக்கு ஈமக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 2191